தென்மொழி

என்ன முன்னேற்றம் வந்துவிடும்?

தேர்தல் அறிக்கைகள்
திட்டம் உறுதிமொழி
சேர்கின்ற கூட்டணிகள்
சேராதார் மாற்றணிகள்

வேட்பாளர் பட்டியல்கள்
விண்ணளவு மெய்ச்சீர்த்தி
ஆட்பெருக்கங் காட்டுகின்ற
ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்

வண்ணச் சுவரொட்டி
வந்திறங்குந் துண்டறிக்கை
எண்ணத் தொலையா
விளம்பரங்கள் ஏராளம்

கொடிகள் பதாகைகள்
தோரணங்கள் கோடை
இடியை நிகர்த்தொலிக்கும்
ஏற்றமிகு வெல்விளிகள்

கருத்து விளக்கம்
கனிவான கோரிக்கை
வருத்துகின்ற மாற்றார்
வசவுரைகள் ஏளனங்கள்

இன்ன பிறவெல்லாம்
தாங்கிவருந் தேர்தல்களால்
என்னபெரு முன்னேற்றம்
இங்குவந்து சேர்ந்துவிடும்?

(தொடர்ச்சி 17-ஆம் பக்கம்)

உள்ளே...

எரிந்து சாம்பலாகட்டும்!

கொதிப்புறு நறுநெய்!

ஆளுநர் மாளிகையில் சுப்பிரமணியச்சாமியின் திருவிளையாடலா?

மத ஆளுமையும் கலவரங்களும்

ஏன் இந்த ஏமாற்று வேலை?

தமிழ் வழிபாட்டுரிமை: பாவலரேறு முறையீடும் உச்சமன்றத் தீர்ப்பும்!

அமெரிக்கக் கொடுவினைப் பட்டியலும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்!

தமிழ் இயக்கங்களின் எழுச்சி

நூலறிமுகம்

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 29
ஓலை - 12
தி.பி. 2028 சிலை (திசம்பர் - 1997)

எரிந்து சாம்பலாகட்டும்!

மனுநூல்,
எரிந்து சாம்ப லாகட்டும் ! - நம்
இன இழிவு நீங்கட்டும்! - இங்கு
எல்லாரும் சமமெனும் நிலை
இறுதி ஆகட்டும்! - சூழ்ந்த
இருள் போகட்டும்! (மனு)

உரிந்து போன தோல்களுமாய்
உடைந்து போன எலும்புமாய் - நெஞ்சம்
கரிந்துபோன தமிழர் வாழ்வு
கசடு நீங்கிப் பொலியட்டும்! (மனு)

தெரிந்து செய்யும் கொடுமைகளால்
தீமை சேர்க்கும் கயமையால் - வாழ்வு
சரிந்து போன தமிழரினம்
சம உரிமை ஏற்கட்டும்! (மனு)

தாழ்ச்சி நீங்கி, மாட்சி ஓங்கத்
தமிழர் ஒன்று சேரட்டும்! - பகை
வீழ்ச்சி பெற்று மாய்ந்து போக
விளைச்சல் உறுதி ஆகட்டும்! (மனு)

வேதம் ஒழிக! புராணம் ஒழிக!
வேற்றுமைகள் நீங்குக! - இழி
சாதி ஒழிக! மதமும் ஒழிக!
சமன்மை பொதுமை ஓங்குக!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(7.5.81 - மனுநூல் எரிப்புப் போராட்டத்தில் தளைப்படுத்தப்பட்டுக் கோவைச் சிறையில் இருக்கையில் எழுதியது)

கொதிப்புறு நறுநெய்!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார் —

எவர்கொல் அவர்க்கே முனிவாற் றும்மே
அரைசாள் இழிசின் புரைசூழ் நெஞ்சினன்
பறைவாய் தெறிக்கும் பத்த வச்சலன்
பெயரா விருக்கை நினைவிற் றப்பி
வடவர்ப் பணியும் முடவெள் ளறிவின்
இட்ட போக்கிற் கிடறாக் காவலர்
சுட்டுக் கிடத்திய செந்தமிழ்ச் சிறாஅன்
வளங்கூர் நாவின் இளங்கோ
மருந்தகத் துளைந்துயிர் துறப்பப் புடைந்து
கற்பத் தூக்கிய சுவடி வீசி
வெற்புத் தோளில் விறலேற்றித்
தெறுவிழியில் தீயேற்றிச்
செந் நாவிற் செற்றத்தார்
உண்ணாவி அறக்கழல
ஒருசூலிற் பன்னூறாப்
புற்றீயற் புறப்பாட்டின்
கதிர்கொன்ற களமென்ன
எதிர்நின்ற மரம் வீழ்த்தி
ஒச்சுமுகத் தடக்கையின்
காச்சிதர்க்கும் களிறன்ன
மலையெரிவாய் பீரந்தன்ன
உலைநெஞ்சின் வெளியேறிப்
புதுப்புனலின் கதழ்போகிக்
கொதிப்புறு நறுநெய் யாக
விதிர்ப்புறப் படைப்புல மெதிர்ந்த ஞான்றே!

பொழிப்பு:

எவர்தாம் அவர்களுக்கு எழுந்து நிற்கும் கடுஞ்சினத்தை ஆற்றக்கூடியவர்; அரசு ஆள்கின்ற இழிமையும் சிறுமையும் கொண்டு, தவறான நடவடிக்கைகளையே ஆராய்கின்ற உள்ளத்தினனும், பறைபோல் முழங்குகின்ற கட்டளைகளைத் தெறிக்கின்ற வாயினனும் ஆகிய பத்தவச்சலன் என்னும் முதலமைச்சன், தன் பதவியமுத்தத்தினின்றும்

பெயராமல் இருந்த இருக்கையின் நலத்தினால், தன் நினைவில் தவறியும், தனக்கு மேலராகிய வட நாட்டினர்க்குப் பணியும், கோணலான வெள்ளிய அறிவினோடும், தான் இடுகின்ற கட்டளைக்குச் சற்றும் இடறாத போக்கினை உடைய காவலர்கள், துமுக்கியால் சுட்டுக்கிடத்திய செந்தமிழ் காக்கும் இளையோனாகிய, வளமையும் கூர்மையும் உடைய நாவினனாகிய இளங்கோ என்னும் மாணவன், மருத்துவமனையின் கண் துன்புற்று உயிர் துறந்தானாக; அதனால் அளாவியெழுந்த மாணவர்கள் தாங்கள் கற்பதற்காகக் கொண்டுசென்ற நூல் சுவடிகளை ஒரு புறத்தே வீசி யெறிந்துவிட்டுத் தங்களுடைய மலை போலும் தோள்களில் வீரத்தை ஏற்றிக் கொண்டு கனல்கின்ற விழியில் தீயினை ஏற்றிக்கொண்டு, கல்வி பயிலும் செவ்விய நாவில் சினத்தை உடையவராக, உள்ளுயிர் அறவே கழன்று வெளியே கழியுமாறு ஒரு கருப்பப் பேற்றில் பல நூறு ஈசல்கள் புறப்பட்டு வெளியேறுதல்போல், கதிர்களைப் பிடுங்கி யெறிகின்ற நெற்களம் போலும், எதிரே நிற்கின்ற மரங்களையெல்லாம் வீழ்த்தி, ஓச்சியவாறு, முகம் படுத்திய பருத்த கைகளை நீட்டிக்கொண்டு, காட்டை அழிக்கின்ற களிறுகள் போல், எரிமலையின் வாயினின்று சிதறியடிக்கின்ற உலைபோன்ற நெஞ்சுகளை உடையவராகி, (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்றும்) வெளியேறிப் புது வெள்ளத்தின் பொங்குகின்ற சினத்தவராகிய போக்குடையவராகிக் கொதிக்கின்ற நல்ல நெய்போல், பிறர் நடுக்கமுற, அக்காவலர் படைகளை எதிர்த்துப் போரிட்ட பொழுதில்!

குறிப்பு:

1965-இல் இந்தி வல்லாண்மையை எதிர்த்து மாணவர்கள் வீறு கொண்டு கிளர்ந்தெழுந்தனர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் திரு. அரசேந்திரன் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். குண்டடிபட்ட மற்றொருவரான திரு. நெடுமாறன் மருத்துவமனையில் பண்டுவம் செய்யப்பட்டு வந்தார். ஆயினும் அவரும் இறந்துவிட்டதாக அக்கால் செய்தி பரவியது. (பின்னர் அவர் நலம் பெற்றார். இப்போது தமிழாசிரியப் பணியாற்றி வருகிறார்.)

பாவலரேறு ஐயா அவர்கள் மாணவர்களின் வீரத்தைப் புகழ்ந்து பாராட்டிப் பாடிய பாடல்கள் (உரையுடன்) நூறாசிரியத்துள் இடம் பெற்றுள்ளன. பன்னூறு மாணவர்களைச் சுட்டுக் கொல்லவும், பற்பலர் எரிந்து உயிர் துறக்கவும் காரணியமான அற்றை முதலமைச்சர் கொடுங்கோலன் பத்தவச்சலற்கு இற்றைத் தமிழக அரசு மணிமண்டபம் கட்டுவதை யொட்டிப் பத்தவச்சலன் எனும் பெயர் இடம்பெற்றுள்ள இப்பாடலை ஈண்டு வெளியிடுகிறோம். இப்பாடலில் இளங்கோ என்று குறிப்பிடப்பட்டிருப்பவர் திரு. நெடுமாறன் ஆவார்.

–இறை

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் திபி.1990 (1959))

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.29) திபி. 202அ - சிலை (திசம்பர்-'97) (ஓலை.12

ஆளுநர் மாளிகையில் சுப்பிரமணியச்சாமியின் திருவிளையாடலா?

தமிழ்நாட்டு அரசியலில் திடுமென வந்து குதித்துத் தம் குழறுபடைகளால் குழப்படிகள் செய்து கொண்டிருப்பவர் ஆரிய நச்சுத் தனத்தின் அடங்கலான சுப்பிரமணியச்சாமி. அறிக்கைகள், நேருரைகள் என்னும் பெயரில் நாளுக்கொரு பொய்யும் பொழுதுக்கொரு புனை சுருட்டுமாக இவர் வெளிப்படுத்தும் எவற்றையும் இங்குள்ள தாளிகைகள் வாரிச் சுமக்கத் தவறுவதில்லை. இவ்வெற்றுவேட்டின் பரபரப்பான குற்றச் சாட்டுகளும் எதிரிகளின் அழிவுக்கு உடுக்கடித்துக் கெடுவைப்பதும் தாளிகையாளர்களைச் சுறுசுறுப்படையச் செய்துவிடுகின்றன.

அமெரிக்காவின் கைக்கூலி என்று பரவலாகப் பேசப்படும் இச் சுப்பிரமணியச்சாமி தொடர்பாகத் தெரிந்து கொள்ள வேண்டியது இன்னொன்றும் உண்டு. 'மேனாள் தலைமையமைச்சர் இராசீவ், தமிழ் நாட்டு மக்களின் ஆதரவில்லாமல் கொலை செய்யப்பட்டிருக்க முடியாது – தமிழ் மக்களின் ஆதரவினாலேயே இராசீவ் கொலை செய்யப்பட்டிருககிறார்' என்றவாறு தமிழ்மக்கள் அனைவரையும்

கொலைப்பழி சுமத்தி இழிவுபடுத்தி அவதூறு அறிக்கை எழுதியது மட்டுமல்லாமல், அவ்விடைக்கால அறிக்கை முறையாக அரசுவழி வெளிப்படுவதற்கு முன்னாலேயே தாளிகையில் வெளியிடத்தந்து, தமிழ்நாட்டு அரசுக்கு இடையூறு செய்ய முற்பட்டதோடு இந்திய அரசியலையும் குலைவுறச் செய்திருக்கும் 'நடுவர்' மிலாபு சந்து செயின், சுப்பிரமணியச்சாமி நடுவணரசு அமைச்சராக இருந்த போது அவராற்றான் தில்லி மாநிலத் தலைமை நடுவராக அமர்த்தப்பெற்றார். மேனாள் முதலமைச்சர் செயலலிதாவுக்கு ஒன்றுவிட்ட தங்கையின் அளிய(மைத்துன)ரான இச் செயின் சுப்பிரமணியச்சாமிக்கு நன்றிக் கடனாகவும் தம் உறவுணர்ச்சியாலுமே தமிழர்கள் மீதான அவதூறு அறிக்கைவேலையைச் செய்திருக்கிறார் போலும்!

செயினின் தில்லுமுல்லு அறிக்கையிலும் ஒருவாறு திரைமறைவில் நிற்கும் சுப்பிரமணியச்சாமி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன் அற்றை முதலமைச்சர் செயலலிதாவை எதிர்த்து, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் வீழ்ச்சிக்கு அடுத்தடுத்துக் கெடுவைத்துக் கொண்டிருந்தபோது, தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் செயல்பட்டுக்கொண்டிருப்பதாக அவ் வாட்சியின்மீது குற்றஞ்சாட்டப் புகுந்து, தமீழீழத் தலைவர் பெருமைமிகு பிரபாகரன் அவர்களை இழித்துரைக்கப் 'பன்னாட்டுப் பறையன் (International Pariah)' என்னுஞ் சொல்லை பயன்படுத்தினார். அது தமிழ் நாட்டில் ஒருசாராரைப் பழிப்பதாக அமைந்தமையால் மக்களிடையே கிளர்ச்சி மூளவே, அச்சூழலைப் பயன்படுத்திக்கொண்டு சுப்பிரமணியச்சாமியைப் பழிவாங்கும் நோக்குடன் காவல்துறையின் மூலம் தீண்டாமை யொழிப்புச் சட்டத்தின்கீழ் அவர்மீது குற்றஞ்சாட்டி அவரைத் தளைப்படுத்தி உசாவலுக்கு (விசாரணைக்கு) உட்படுத்த முயன்றார். அக்கால் தலைமறைவாகிவிட்ட இவர் 'வேற்றுப்புனைவில் (மாறுவேடத்தில்) வந்தார்; ஆட்டங்காட்டினார்' என்று தாளிகைகள் இவரைக் கதை நாயகனாகச் சித்திரித்து வியப்பையும் நகைப்பையும் விளைவித்தன!

அப்போதெல்லாம் இந்தப் பேர்வழி சென்னை - கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் அனைத்து வகையான ஏந்துகளுடனும் பதுங்கி இருந்திருக்கிறார் என்னுஞ் செய்தி அண்மையில் வெளியாகியுள்ளது. அங்கிருந்து அவர் அமெரிக்கா முதலான பல்வேறு இடங்களுக்குத் தொடர்புகொண்டு தொலைபேசியைப் பயன்படுத்திய வகையிலேயே பன்னூறாயிரம் உருவா கட்டணம் ஆளுநர்மாளிகைச் செலவில் ஏறியுள்ளது.

ஆளுநர் மாளிகையில் சுப்பிரமணியச்சாமியின் திருவிளையாடல் களுக்கெல்லாம் உடந்தையாய் இருந்து, முறைகேடாக உதவிகள் செய்து,

ஒத்துழைத்தவர் ஆளுநரின் செயலாளரான திருவாட்டி சீலாப்பிரியா என்பவராம். தமிழ்நாட்டில் சுப்பிரமணியச்சாமிக்கு நெருக்கமானவர்களுள் திருவாட்டி சந்திரலேகாவையும் செல்வி செயலலிதாவையும் அடுத்து இப்பெருமாட்டி மூன்றாமவராக இடம்பெற்றுள்ளார்.

மேற்கூறிய கிளர்ச்சியின் போது சுப்பிரமணியச்சாமி சென்னை யினின்றும் ஆளுநர் மாளிகைச் செலவிலேயே மும்பைக்குத் தப்பிச் சென்றிருக்கிறார். அதற்கான வானூர்திச் சீட்டையும் சு. சாமி என்னும் பெயருக்கு இச்சீலாப்பிரியாவே வாங்கித் தந்திருக்கிறார்.

சீலாப்பிரியாவின் ஊழல்கள் குறித்து ஆளுநர் மாளிகை வளாகத்தில் கதைகதையாகப் பேசிக்கொள்கிறார்கள்.

சென்னையிலும் ஊட்டியிலும் உள்ள ஆளுநர் மாளிகைகளில் பாதுகாக்கப்பட்டு வந்த தொன்மைச் சிறப்பு வாய்ந்த கலைச்செல்வங் களும், வரலாற்று பெருமைமிக்க அரும்பொருள்களும் சீலாப்பிரியாவின் கண்காணிப்பிலேயே 'காணாமல்' போயிருக்கின்றன என்றும், ஈரிடத்தும் உள்ள வளமனை வளாகப் பண்ணைகளின் பெருவாரியான விளைச்சல் பொருள்களையும் பிறவற்றையும் சீலாப்பிரியாவே ஏப்பம் விட்டுவிடுகிறார் என்றுங் கேள்வி.

ஆளுநரைப் பார்ப்பதற்கு வருகைதரும் வேற்றுமாநில அல்லது வெளி நாட்டைச் சேர்ந்த பெருந்தரத்து விருந்தினர்களுக்குப் பரிசு வழங்குவதற் கென்று வாங்கப்பட்ட' தமிழ்நாட்டின் புகழ்பெற்ற பட்டுப் புடைவை களில் பெரும்பாலானவை, சீலாப்பிரியா தம் எதிரிகளை அழிப்பதற்காக நடத்தும் வேள்விக்குண்டத்தில் போட்டு எரிக்கப்படுகின்றனவாம். ஆளுநர் மாளிகைக் கணக்கில் வாங்கப்பட்ட விலைமதிப்பு மிக்க அப் பட்டுப் புடைவைகளின் பட்டியல் மிக நீளம். பட்டுச் சவளிக் கடைக்குச் செலுத்த வேண்டிய பெருந்தொகை நிலுவையில் உள்ளது.

இவற்றையும் இன்ன பிறவற்றையுமெல்லாம் தக்க அடிப்படைகளுடன் குற்றச்சாட்டுகளாக வைத்துச் சென்னை உயரற மன்றத்தில் பொதுநல வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. சட்டக் கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக் கழகத்தின் தலைவரான வழக்கறிஞர் கலைமணி அவர்கள் இவ்வழக்கைத் தொடுத்துள்ளார்.

ஆளுநர் மாளிகை ஊழல்கள் குறித்து நடுவணரசுப் புலனாய்வுத் துறையினர் உசாவல் நடத்த அறமன்றம் ஆணை பிறப்பிக்க வேண்டும், உசாவலுக்கு ஊறு நேராவண்ணம் சீலாப்பிரியாவையும் அவருக்குத் துணையானவர்களையும் பணிமாற்றம் செய்யவேண்டும் என்றும்; ஆளுநர் மாளிகையினின்றும் காணாமற் போன கலைச்செல்வங்கள்

மற்றும் அரும்பொருள்களைத் தேடி மீட்டுக் கொணர்ந்து பேணிப் பாதுகாக்கச் செய்ய வேண்டும் என்றும் வழக்கறிஞர் கலைமணி கோரியுள்ளார்.

தென்மண்டிலக் கலைபண்பாட்டு வளர்ச்சிக் கழகத்தை மேம்படுத்தி அதனைச் செம்மையாக நடத்தச் செய்ய வேண்டும் என்பதும் திரு. கலைமணி அவர்களின் கோரிக்கைகளுள் ஒன்று.

ஆளுநர் மாளிகை நடப்புகள் - ஊழல்கள் குறித்துப் பொதுநல வழக்கொன்று தொடரப்பட்டிருப்பது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறை என்று தெரிகிறது.

இவ்வழக்கின் மூலம், தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள அனைத்து மாநில ஆளுநர் மாளிகைகளும் நடுவணரசின் உள்துறை அமைச்சகத்தால் அவ்வப்போது கண்காணிக்கப் பெறவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

ஆளுநர் மாளிகையில் சுப்பிரமணியச்சாமி போன்ற அரசியல்காரர் களின் செயற்பாடுகள் குறித்து அறமன்றத்தின் மேல் நடவடிக்கைகளின் பொருட்டு வெள்ளை யறிக்கை யொன்று அளிக்கப்பெற வேண்டும் என்பது இவ்வழக்கின் மற்றொரு கோரிக்கை.

கடந்த 5.11.97 அன்று சென்னை உயரற மன்றத்தில் நடுவர் பதுமநாபன் அவர்கள் முன் உசாவலுக்கு வந்த இவ்வழக்கு இன்னும் அ்வரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இவ்வழக்கை ஏற்றுக் கொள்ளலாமா, கூடாதா என்பது குறித்து அறமன்றத்துக்கு ஏடல் (ஆலோசனை) கூறும் பொருட்டு வழக்கறிஞர் குழு ஒன்று அமர்த்தப்பட்டுள்ளது. இக் குழுவில் அரசின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த தலைமை வழக்கறிஞர்களும், வழக்கறிஞர் கழகங்கள் பலவற்றின் தலைவர்களுமாக இருபதின்மர்க்கு மேற்பட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

குற்றச்சாட்டுகளில் உள்ள உண்மைகளைக் கண்டு குற்றவாளிகளைத் தண்டனைக்கு உட்படுத்துவதற்கு மாறாக, குற்றச் சாட்டுகள் தவறானவை என்று தெரிந்தால் வழக்குத் தொடுத்தவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம்; அரசியலமைப்புச் சட்டப்படி பதவியமர்த்தம் பெற்ற அதிகாரிகள்மீது வழக்குத் தொடரப்படும் போது அறமன்றம் எத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வது; பொதுநல வழக்குத் தொடர்வதற்கு என்ன வரம்பீடுகள் வகுக்கலாம்; வழக்குப் பற்றிய விளக்கங்கள் செய்தி யேடுகள் முதலியவற்றில் இடம்பெறாதபடி தடைப்படுத்தலாமா என்பன

வுள்ளிட்ட எழுவகை அடிப்படையிலேயே ஏடல்கள் எதிர்நோக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டமன்ற உறுப்பினர் திருப்பத்தூர்ச் சண்முகம் அவர்களைச் சந்தனக் கட்டை கடத்தலில் தொடர்புபடுத்தி யாரோ ஒருவர் எழுதிய கடிதம் 'இந்து' நாளேட்டில் வெளிவந்ததைக் கொண்டு, அச் சட்டமன்ற உறுப்பினர் மீது நடுவணரசுப் புலனாய்வுத் துறை உசாவல் நடத்துமாறு ஆணையிட வேண்டிச் சுப்பிரமணியச்சாமி தொடுத்த பொதுநல வழக்குத் தம்மிடம் உசாவலுக்கு வந்த போது எவ்வகைத் தயக்கமுமின்றி உடனடியாக ஏற்றுக்கொண்ட நடுவர் பதுமநாபன், இந்த வழக்கை ஏற்பதற்கு மட்டும் இத்துணைக் காலந்தாழ்த்துவது பற்றி உயரற மன்ற வழக்கறிஞர்கள் வியப்புற்றுப் பேசிக்கொண்டனர்.

இவ்வாறு செய்திகள் அம்பலத்துக்கு வரத் தொடங்கிவிட்டமையால், குற்றம் புரிந்தவர்கள் தாம் தப்பவும் நிலையைச் சரிசெய்யவும் முனைந்து, 'கலைச்செல்வங்கள், அரும்பொருள்கள் முதலானவற்றைத் தாம் வைத்துக் காப்பாற்ற இயலாது என்று கூறி அவற்றை யெல்லாம் முன்பக்கலிட்டு (முன்தேதியிட்டு) அரும்பொருட் காட்சியகத்தில் ஒப்படைக்கும் முயற்சிகள் நடைபெறுவதாக ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்போதுங்கூடச் சுப்பிரமணியச்சாமி ஆளுநர் மாளிகைக்கு அடிக்கடி தொடர்புகொண்டும் நேரில் சென்றும் பல்வேறு கமுக்கச் செய்திகளைத் தெரிந்துகொள்கிறார்; அவற்றை யார் யாருக்கோ தெரிவித்துக் கொண்டிருக்கிறார் என்று கேள்வி.

ஆளுநர் மாளிகை தொடர்பான இச் செய்தி வெளிப்பாட்டை யொட்டித்தான் 'ஆளுநர் பதவியே தேவையற்றது' என்னும் பழைய குரல் அண்மையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடமிருந்து எழுந்தடங்கியது போலும்!

ஆளுநர் பதவி தேவையானதா, தேவையற்றதா என்பது வேறு. குடியாட்சி முறைப்படி அரசின் நடவடிக்கைகள் அனைத்தையும் அறிந்து கொள்ளவும், தவறு நடவாமல் தடுக்கவும், தவறு செய்தவர்களை முறையாகத் தண்டனைக்குட்படுத்தவும் மக்கள் உரிமை படைத்தவர்கள். இதற்கு ஆளுநர் மாளிகை நடப்புகளும் அப்பாற்பட்டனவாக இருக்க முடியாது. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட படிநிகராளியர் மீதும் ஆட்சியாளர்கள்மீதும் குற்றஞ்சாட்டவும், வழக்குத் தொடுக்கவும், அவர்களைத் தண்டனைக்குட்படுத்தவும் வாய்ப்பிருக்கும்போது, அமர்த்தம் பெற்ற ஆளுநர்களோ, அதிகாரிகளோ அந்நிலைகளுக்கு நெறி விலக்கானவர்களல்லர் என்பதே முறையாக இருக்க முடியும்!

– இறை

மத ஆளுமையும் கலவரங்களும் !

– மா. பூங்குன்றன்

இப்போது இந்தியா எனப்படும் இந்த மண்ணில் பல நூற்றாண்டுகளாக மத நுழைவுகள், கலவரங்கள், வல்லாளுமைகள் நடந்து வந்திருக்கின்றன. உலக மொத்தமும் எடுத்துக் கொண்டால் இந்தியா வில்தான் மிகுதியான மதங்கள் தோன்றிப் பரவியிருக்கின்றன.

வெளிநாட்டு வணிகர்களும், ஆளுமை செலுத்த எண்ணம் கொள்ளும் வெளிநாட்டு ஆற்றல்களும், மக்கள்தொகைப் பெருக்கமும் நிலவளமும் மாழை வளமும் மிகுந்த இந்நாட்டின்மேல் குறிவைத்து நுழையும் சூழ்ச்சியுணர்வு போன்று மதவாளர்களும் இந்நிலத்தின் மேல் குறிகொண்டனர்.

இந்நாட்டு மதங்களுக்கிடையே உள்ள உட்பகைகளும் அதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தன. சிவனிய, மாலிய, புத்த, சமண மதங்களும் இந்த நாட்டு மக்களைக் கூறுபோட்டுக்கொண்டு மதங்களைப் பரப்பத் தொடங்கின.

ஆரியர்களின் வருகைக்குப்பின் ஒவ்வொரு மதத்திலும் உள்ள தம் ஆளுமைக்கு இசைவான கூறுகளையும் தம்முடையவாக்கிக் கொண்டு ஒரு புதிய மதமாக வேதமதம் – இந்துமதம் தன்னை உருவாக்கி அனைத்தையும் விழுங்கத் தொடங்கியது.

புத்த மதம் போன்றவை இந்நாட்டில் இந்து மதத்தை எதிர்த்து நிற்கமுடியாமல் ஆரியத்தால் கூறுபட்டுப் போனதோடு வெளி நாடுகளுக்கும் சென்றுவிட்டன.

இந்துமதம் ஆரியர்களுக்கு முழுநலனையும் கொடுத்துவிட்டு இந்நாட்டு மக்களைப் பொருளியல் பிரிவுகளின் அடிப்படையில் கொண்டு கூறுபோட்டு வல்லாளுமை செய்தது. பேரரசர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு மக்களிடமிருந்து அவர்களைப் பிரித்தெடுத்து ஆட்சியைத் தங்கள் கட்டுக்குள் கொண்டுவந்தது.

மதத்தால் அரசையும் ஆளுமை செய்யமுடியும் என்று இந்நாட்டில் முதலில் நிறுவியது இந்துமதமே. மிக அமைதியாகவும் சூழ்ச்சித் திறனாலுமே இச்செயலைச் செய்துமுடித்தனர். முடித்தவர் கள் அரசர்களோ, பெருமக்களோ அல்லர். ஆரியப் பார்ப்பனர்களே!

இந்துமதத்தை அடுத்து, இந்நாட்டில் பரப்பப்பட்ட மதங்களில் இரண்டு கிருத்துவம், இசுலாம். இசுலாம் படையெடுப்புகளால்

வடநாட்டில் அரசைக் கைப்பற்றியது. வடநாட்டுச் சிற்றரசர்களை யெல்லாம் அடக்கி மக்களை மதம் மாறச் செய்தனர். இவர்கள் சூழ்ச்சியையோ அரவணைப்பினையோ நடைமுறையாகக் கொள்ளவில்லை. நேரடியாகத் தங்கள் படைவலிவைப் பயன்படுத்தினர். தென்னாடுகள் அப்போது அவர்களுக்கு ஆட்படவில்லை.

கிருத்துவ மதத்தை மதக் கழகங்களாலும் மதக்குரவர்களாலும் கொள்கை வழியாகவும் தொண்டு வழியாகவும் தென்னாடுகளில் முதலில் பரப்பத் தொடங்கினர். இவர்கள் இலக்கியங்களையும் நூல்களையும் படைத்து மொழிக்கும் மக்களுக்கும் தொண்டாற்றினர். கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி மக்களை விழிப்படையச் செய்தனர். தொடர்ந்து வந்த ஆங்கில வணிகக் கழகங்கள்வழி ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு மிக எளிதாக மதம் இங்குப் பரப்பப்பெற்றது. இசுலாம் மதம் ஆட்சியிழந்தது ஆங்கிலேயரிடம் ஆட்சிமாறியது.

ஆங்கிலேயோர் ஆட்சியின் பொழுது, அதற்குமுன் இருந்த இசுலாம் இந்நாட்டை மீண்டும் கைப்பற்ற எண்ணியதன் விளைவாக மக்களைத் தூண்டியது. இசுலாம் மக்களின் படிநிகராளியாக சின்னாவும் நின்றார். இந்த நாட்டை இந்துமத நாடாக்க வேண்டுமென்று இந்நாட்டு இந்துமதத்தைச் சார்ந்த இயக்கங்கள் ஒரு பக்கம் நின்றன. ஆங்கிலேயருக்குப்பின் யார் இந்த நாட்டை அடிமைப்படுத்துவது என்ற இரண்டு மதங்களுக்கிடையே எழுந்த கலவரமே இந்து – முசுலீம் கலவரம்.

இரண்டுமே அவர்களின் நோக்கத்தின்படி ஒரு முழுவெற்றி பெறவில்லை. பெரும்பான்மை முசுலீம் இருக்கும் பகுதியை முதலில் கைப்பற்றிக் கொண்டு பிறகு இந்த நாட்டை முழுவதுமாக ஆள வேண்டுமென்று பிரிந்தது பாக்கிததான்.

ஆங்கிலேயர் ஆட்சிக்குக்கீழும், ஆங்கிலேயரைப் பல்வகையில் தமக்குச் சார்புபடுத்திக்கொண்டும் ஆரியர்கள் தம் மதத்தை வளப் படுத்திக் கொண்டு இசுலாம் போன்றவற்றை பரவவொட்டாமல் செய்து வந்தனர்.

இந்த நாட்டை இந்து நாடாக்கிவிடவேண்டும் என்று முழுக் கங்கணத்துடன் இசுலாமி அடையாளங்களை அழித்துக் கொண்டிருப்பது இந்துமத இயக்கங்கள்.

தமிழ்நாடோ ஆங்கிலேயருக்குமுன் இசுலாம் ஆளுமைக்கு உட்பட்டதில்லை. இந்துமதமாகவும் இருந்ததில்லை. மனுவின் தாக்கம் மட்டும் இங்குத் தமிழக் மக்களை ஆட்கொண்டிருந்தது.எனவே இந்து – முசுலீம் கலவரம் இங்கு இருந்ததில்லை.

இந்து இயக்கங்கள் இந்தியாவை இந்து நாடாக்கத் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. அச்செயல்களில் முகாமையான ஒன்றுதான் பாபர் நினைவிடத்தை இடித்தது. அதன்வழி நாடளவில் ஆதரவு கோரியது. ஆங்காங்குள்ள இந்துமத விரும்பிகள் இதற்கு ஆதரவு கொடுத்தனர்.

ஏற்கெனவே ஆரியச் சூழ்ச்சிக்கும் ஆளுமைக்கும் அடிமைப்பட்டு உருப்பெற்ற நாடாகவே இந்தியா விளங்கிவருகிறது.

இதற்கிடையில் அமெரிக்கா உலகை ஆளுமை செலுத்தும் வகையில் பன்னாட்டு வணிக முயற்சியில் ஒவ்வொரு நாட்டின் உள் அரசியலிலும் பண்பாட்டிலும் ஈடுபட்டு அந்நாட்டினைச் சீரழித்துவருவது அனைவரும் அறிந்த ஒன்று.

சோவியத்து நாட்டைக் குலையச் செய்தபின் இப்போது எதிரிகளாக இருப்பது இசுலாம் நாடுகளே. சதாம் உசேனுடன் போருக்குப் பிறகு முசுலிம் நாடுகளை ஆளுமை கொள்ள சில நாடுகளின் துணை அமெரிக்காவிற்குத் தேவைப்பட்டது.

இந்தியா அதற்குப் பெருந்துணையானது. இந்து மதவெறியர்களின் வழி இந்தியாவை இசுலாமுக்கு எதிரிநாடாக்கும் முயற்சியைச் செய்தது.

இன்று இசுலாம் மக்களுக்கு எதிராக இருப்பது இந்தியாவைப் பொறுத்தவரை ஆரிய மதமான இந்துமதம். உலகைப் பொறுத்தவரை அமெரிக்கா.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, மதவழி அமைதியாக இருக்கும் தமிழ்நாட்டில் இக் கலவரத்தைத் தூண்டியிருப்பதுதான் வேடிக்கை.

இன்று இசுலாம் மக்களாக இருப்பவர்கள் நேற்று எந்த ஒரு மதத்திலும் இருந்தவர்கள் அல்லர். பழைமையான கடவுள் நம்பிக்கைப் போக்கில் ஊர்த்தெய்வங்களை வணங்கிக் கொண்டிருந்த குப்புசாமி, முனிசாமிகள் தாம் அவர்கள். மதங்கள் நுழைந்து இவ்வாறு அலைக்கழிப்பதுதான் துயரம். அதே நேரத்தில் இந்துமதத்தில் உள்ள தீண்டாமைக் கொடுமைகளைத் தாங்காமலும் மதம் மாறிய மக்கள்தாம் அவர்கள்.

இப்போது இந்த ஆரியமதச் சூழ்ச்சிகளையும் அமெரிக்க வல்லாளுமையையும் நாம் எதிர்த்தாக வேண்டும். அதற்கான ஏடல்களை நாம் தேடவேண்டும். மதங்கடந்து நாம் சில காப்புகளையும் நெகிழ்வுகளையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

அவரவர்கள் அம்மதங்களிலேயே இருக்கலாம். ஆனாலும் மதவேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல் ஒன்றுபடுதலே இன்றைய எந்த எதிர்ப்பிற்கும் தாங்கும் திறனாகும்.

மத அடையாளங்களான பெயர்கள், குறிகள், பழக்க வழக்கங்கள் இவற்றைப் பொது இடங்களில் குறைத்துக்கொண்டு தமிழகத்துப் பழக்க

வழக்கங்களில் ஈடுபட்டு ஒற்றுமை பெறல்வேண்டும்.

ஒருநாட்டில் வாழும் மக்கள் தாங்கள் தங்கள் மதத்தால் வேறுபட்டு நிற்பதுடன் மொழி, பண்பாட்டுக் கலைக்கூறுகளாலும் வேறுபட்டு நிற்பது அவர்களைத் தனிமைப்படுத்தி இத்தகையச் சிக்கல்களைத் தொடர்ந்து தோற்றுவிப்பதாகத்தான் முடியும். எனவே மதச் சடங்குகளைத் தமக்காக மட்டும் ஆக்கிக்கொண்டு, பொது நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பியலோடு எவ்வெவற்றால் ஒன்றுபட முடியுமோ அவ்வவற்றால் ஒன்றுபட்டு இயங்குவதே ஆளுமையர்களின் வழியானச் சிக்கல்களை முறியடிப்பதாக அமையும்!

"என்றன் பாட்டு பொதுமைப் பாட்டு
எனக்கும் அதுதான்
உயர்வூட்டும்
....
'என்றன் பாட்டே புதுமைப்பாட்டு
எல்லாப் பாட்டும்
பொதுவுடைமை!' — பாவலரேறு

பாவலரேறு ஐயா
பெருஞ்சித்திரனார் — அவர்களின் பாடற்களஞ்சியம்
'கனிச்சாறு'
விரைவில் வர இருக்கிறது!

- தமிழையே தம் தாயாகவும், துணையாகவும், உறவாகவும், அனைத்துமாகவும் எண்ணி வாழ்ந்திட்ட நம் அரும்பெறல் ஐயா பாவலரேறு அவர்களின் பாடல் தொகுப்பே 'கனிச்சாறு'.
- தம் பள்ளிப் பருவமுதல் ஐயா அவர்கள் எழுதிய தனிப் பாடல்கள் முழுமையும் (முன் வெளிவந்த மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கித்) துறை வாரியாகப் பகுக்கப் பெற்று ஆறு தொகுதிகளாக வெளிவர இருக்கின்றன.

❑ நூல் முன்பதிவுத் திட்ட அடிப்படையில் தொகுப்புகள் அனைத்துக்குமாக உரு. 300-ஐ முன்பணமாகச் செலுத்துவோர்க்கு மட்டும் 20-விழுக்காடு கழிவு உண்டு.

❑ பிற அனைத்துத் தொடர்புக்கும்:
தென்மொழி நூல்வெளியீட்டு விற்பனையகம்,
5, அருணாசலத்தெரு, சென்னை - 600 005.

தமிழர்கள் மீது கொலைப்பழி சுமத்தி இழிவுபடுத்தும் செயின் குழுவின் அறிக்கையை எதிர்த்துக்

கண்டனப் பேரணி பொதுக்கூட்டம்!

திச.2 - சென்னையில் நடைபெற்றன!

தமிழினத்தை இழிவுசெய்யும் செயின் அறிக்கை மற்றும் பேராயக் கட்சியைக் கண்டித்தும், ஓரவஞ்சகமாகச் செயல்பட்டிருக்கும் செயின் குழுவை முற்றிலுமாகக் கலைக்கக் கோரியும் சென்னையில் அனைத்துத் தமிழியக்கங்களின் சார்பில் தி.பி. 2028 நளி 17 செவ்வாய் (2.12.'97) அன்று பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

அன்று மாலை 5.30 மணியளவில் சென்னை - தியாகராயர் நகர்ப் பனகல் பூங்கா அருகிலிருந்து பேரா. முனைவர் சுப. வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் கண்டனப் பேரணி புறப்பட்டது. "செயின் அறிக்கையை எதிர்த்துத் தமிழ் இயக்கங்கள் நடத்தும் கண்டனப் பேரணி" என்னும் பதாகை பேரணியின் முகப்பில் இடம்பெற்றிருந்தது. தொடர்ந்து பல்வேறு தமிழ் இயக்கத்தவரும் தத்தம் பதாகைகளுடனும் கொடிகளுடனும் பேரணியில் வீறுநடையிட்டு வந்தனர். செயின்குழு அறிக்கையைப் புறக்கணிப்பதோடு, செயின்குழுவையே முற்றிலுமாகக் கலைக்கும்படி தில்லியரசைக் கோரியும், தமிழினத்தை இழிவுபடுத்திப் பழிசுமத்தியுள்ள செயினைக் கண்டித்தும், பேராயக் கட்சியைக் கண்டித்தும் வானளாவ முழக்கங்கள் எழுந்தன.

பாண்டியன் அங்காடி (பாண்டி பசார்) உள்ள தியாகராயர் சாலையில் வந்து இரவு 7 மணியளவில் அச் சாலையின் இறுதியில் தேனாம்பேட்டை ஆலையம்மன் கோயிற் பகுதியை யடைந்தது. அங்குப் புலவர் இறைக்குருவனார் (தென்மொழி அவையம்) அவர்கள் தலைமையில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டமைப்பின் அமைப்பாளர் பேரா. முனைவர் சுப. வீரபாண்டியன் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமையுரையைத் தொடர்ந்து திருவாளர்கள் ச. முருகானந்தம் (ஆவடி தமிழ்ப் பேரவை), தாசுபாண்டியன் (சமத்துவ மக்கட் கட்சி), உவமைப் பாவலர் சுரதா, கயல் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), மா.செ. தமிழ்மணி (உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்), வா.மு.சே. ஆண்டவர் (பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்), அறிவுடைநம்பி (பைந்தமிழ்ப் பாசறை), புலவர். கி.த. பச்சையப்பன் (தமிழியக்கம்), பேரா. ந. பிச்சமுத்து (சென்னைத் தமிழ்ச் சங்கம்), பாவலர் இராமச்சந்திரன் (தமிழ்த் தன்னுரிமை இயக்கம்), பெ. மணியரசன் (தமிழ்த்

தேசப் பொதுவுடைமைக் கட்சி), புலவர் த. சுந்தரராசன் (தில்லைநகர்த் தமிழ்ச் சங்கம்), பன்னீர்ச்செல்வம் (தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியப் பொதுவுடைமைக் கட்சி) ஆகியோர் உரையாற்றினர்.

பேரணி - பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துத் தமிழ் இயக்கங்கள் கூட்டமைப்பின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புலவர் இறைக்குருவனார் முன்மொழிந்த அத் தீர்மானம் வருமாறு:

"நடுநிலையற்றும், உள்நோக்கத்தோடும் உருவாக்கப்பட்டு, தமிழர்களை வலிந்து குற்ற மரபினர் (பரம்பரையினர்) ஆக்கி மிரட்டும் செயின் குழுவின் அறிக்கையை இப்பேரவை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், செயின் குழுவையே முற்றிலுமாகக் கலைத்துவிட வேண்டும் என்றும் இம் மாமன்றம் வலியுறுத்துகின்றது."

தீர்மானத்தை வழிமொழிந்து தியாகு (தமிழ் - தமிழர் இயக்கம்), மேனாள் அமைச்சர் அனூர் செகதீசன் (பெரியார் திராவிடர் கழகம்), வே. ஆனைமுத்து (மார்க்கசிய - பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி) ஆகியோர் உரையாற்றினர். த. பதுமநாபன் (த.தே.பொ.க) நன்றி நவின்றார். இரவு 10.30 மணியளவில் கூட்டம் முடிவுற்றது. பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் ஈராயிரம் பேர் பங்கேற்றனர். ❒

பாவலரேறு ஐயா அவர்களின்

திருக்குறள்

மெய்ப்பொருளுரை

(முதற் பகுதி)

முந்நூறு பக்க அளவில், எழுவகைப் பிரிவில் அமைந்த விரிவான முன்னுரையுடன் கூடியது!

முதற்பத்து அதிகாரங்களுக்கான உரை

பரிமேலழகர் முதல் பாவாணர் வரை பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளை ஏற்றும் மறுத்தும் எழுதப் பெற்ற விளக்கங்களைக் கொண்டது!

நூற்றுக் கணக்கான நூல்களிலிருந்து மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகளும் எடுத்தாளப்பெற்றது!

ஆரிய நெறியை வீழ்த்தி அருந்தமிழ்நெறியை நிலைநாட்டுந் திறத்தது!

விலை : உரு. 150.00 பதிவு அஞ்சல் செலவு உரு. 15.00

ஏன் இந்த ஏமாற்று வேலை?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை இப்போது 83-ஆவது முறையாகத் திருத்தப் போகிறார்கள். ஆறு அகவை முதல் 14 அகவை வரையுள்ள இந்தியக் குழந்தைகள் அனைவர்க்கும் கட்டணமில்லாத கட்டாயக் கல்வியைத் தர வேண்டும் என்பதற்காகவே இந்தத் திருத்தம். விடுதலை பெற்று ஐம்பதாண்டுக் காலம் ஆன பின்னராவது இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறார்களே என்று நாம் மகிழ்ச்சி அடையலாம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பத்தாண்டுக் காலத்திற்குள் இதைச் செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்ய வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்ட நெறி 45 பகுதி 4 ஆணித்தரமாகக் கூறியிருந்தும் அரசியல்காரர்கள் எவரும் இதுவரை கண்டுகொள்ளவில்லை. இப்போது கண்டுகொண்டதும் யாரோ உன்னிகிருட்டிணன் என்ற நல்வினையாளர் ஒருவரால்தான். உச்சஅற மன்றத்தில் அவர் வழக்குத் தொடுக்க, அதன் விளைவாகவே இந்தத் திருத்தம்.

அரசியல் அமைப்புச் சட்ட நெறிகளின்படி இந்தக் கட்டாயக் கல்வியை 1960-ஆம் ஆண்டிற்குள்ளேயே கொண்டு வந்திருக்க வேண்டும். எல்லோரும் படித்துவிட்டால் எங்கே தங்களுக்கு நேரி(வாக்கு)அளிக்காமல் போய்விடுவார்களோ என்று அரசியல்காரர்கள் அஞ்சியிருக்க வேண்டும். இது ஒரு புறம் இருக்கட்டும்.

கொண்டுவந்துள்ள திருத்தங்களாவது தெளிவாக உள்ளனவா என்றால் இல்லை. மாறாகக் குளறுபடியே செய்கின்றன.

கல்விபெறும் உரிமை 21 அ(1)

கட்டணமில்லாத கட்டாயக் கல்வியை அகவை 6 முதல் 14 வரையுள்ள இந்தியக் குழந்தைகள் அனைவர்க்கும் அரசு வழங்க வேண்டும்.

[Right to Education 21 A(1)

The State shall provide free & compulsory education to all citizens of the age of six to fourteen years]

இதில் இன்ன மொழியில் கற்பிக்கப்படும் என்ற குறிப்பில்லை- தாய்மொழி மூலமே கற்பிக்கப்பட வேண்டும் என்ற கட்டாயக் குறிப்பில்லாத போது வேற்று மொழிகள் மூலமும் கற்பிக்கலாம் என்று கருத இடம் தந்து நிற்கிறது, இந்தத் திருத்தம்.

முனைவர் தமிழப்பன்

21 அ(2) மேற்குறித்த பிரிவு (1) இல் கண்டபடியான கட்டணமில்லாக் கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துவதை அரசு தேவையான சட்டத்தின்மூலம் நிறைவேற்றும்.

[21 A(2) the right to free & compulsory education referred to in clause (1) shall be enforced in such manner as the state may, by law, determine]

இந்தப் பிரிவின் படியும் தாய்மொழிக் கல்விக்கு இடமிருக்கும் என்று கருதுவதற்கில்லை. அரசு தாய்மொழி வழியிலோ பிறமொழி வழியிலோ கற்பிக்கலாம். கற்பித்தலுக்குச் சட்டம் இயற்றிக் கொள்ளலாம் என்று இருக்கிறதே யொழிய இன்ன மொழியில் கற்பிக்க வேண்டும் என்று வரையறை இல்லை. வரையறை இல்லாத போது எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்ள இடமேற்பட்டு விடுகிறது.

அடுத்துவரும் திருத்தம் இன்னும் ஒருபடி மேலே போய்த் தனியார் கல்வி நிறுவனங்களில் அரசு கை வைப்பதைத் தடை செய்கிறது.

21 - (அ)

அரசால் நடத்தப்படாத கல்வி நிறுவனங்கள், அரசு உதவிபெறாத கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை மேற்கண்ட பிரிவு 2-இன் படியான கட்டணமில்லாக் கட்டாயக் கல்வித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் சட்டங்களை இயற்றக் கூடாது.

21 A (3)

[The state shall not make any law for free & compulsory education under clause (2) in relation to the educational institutions not maintained by the state or not receiving aid out of state funds]

அப்படியென்றால் தனியார் கல்வி நிறுவனங்கள் இந்தக் கட்டணமில்லாக் கட்டாயக் கல்விச் சட்டத்திற்கு உட்படாதவை - அப்பாற்பட்டவை என்றாகி விடுகிறது. அவர்கள் இன்றுள்ளது போலக் 'கட்டணங்களை' வாங்கிக் கொள்ளையடிக்கலாம் - பள்ளிக் கூடங்களைக் கொள்ளைக் கூடங்களாக ஆக்கி மகிழலாம். அகவை 6 முதல் 14 வரை அனைவர்க்கும் கட்டணமில்லாக் கட்டாயக் கல்வி [21 அ(1)] என்றுவிட்டு அதில் தனியார் பள்ளிகளுக்கு விலக்களித்துக் கட்டணம் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பது கட்டணமில்லாக் கட்டாயக் கல்வி என்ற சட்டத் திருத்தத்தையே நகைப்புக்குள்ளாக்குவதாகும்.

இந்த இரட்டை நிலை எதற்கு? எந்தப் பள்ளியானாலும் - தனியார் பள்ளியோ அரசுப் பள்ளியோ எதுவானாலும் கட்டணமில்லாத கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துவதே நல்லது. அவ்வாறின்றி ஆங்கிலேயரது இரட்டை யாட்சி முறையை அவர்கள் விட்டுச் சென்ற

மெக்காலே கல்வி முறையிலும் புகுத்தி ஏழை எளியவர்களுக்குக் கட்டணமில்லாக் கட்டாயக் கல்வி, பணக்காரர்களுக்குக் கட்டணத் தோடான கல்வி என்ற இருவேறு கல்வி நிலைகளை ஏற்படுத்துவது முறையன்று. அதுவும் கட்டணமில்லாக் கட்டாயக் கல்வி என்ற பேரால்.

அஞ்சல் தலையிலும் பணத்தாளிலும் இன்னும் பலவாறாகவும் காந்தியடிகளைப் போற்றிப் புகழும் இந்திய அரசு, அவரின் தாய்மொழிக் கல்வித் திட்டத்தை மட்டும் குழி தோண்டிப் புதைத்துவிட வரிந்து கட்டிக்கொண்டு செயல்படுவது என்ன முறை என்று விளங்கவில்லை.

ஒரு தலைவனுக்குச் சிலை வைக்கக் குழி தோண்டும் போதே அவனது கொள்கைகளையும் குழியில் போட்டுப் புதைத்து விட்டே சிலை வைப்பது நம் நாட்டுப் பண்பாடு தானே. எனவே இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டு வருகிறோம். அதுவும் எப்போது? இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டில். பொருத்தமான திருத்தம் என்று நம்மை நாமே மார்தட்டி மாபெரும் வெற்றி என்றும் புகழ்ந்து கொள்வோம். நாற்பதாயிரம் கோடி செலவழிக்கப் போகிறோம் என்று பூரித்து நிற்போம்.

இவ்வாறு முன்னுக்குப் பின் முரணாகும் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதைவிடக் கொண்டு வராமலே இருந்திருக்கலாம்.

முதற்பிரிவில் அனைவர்க்கும் கட்டணமில்லாத கட்டாயக் கல்வி, மூன்றாவது பிரிவில் கட்டணமுள்ள கல்வியாக ஏன் மாறுகிறது? யாருக்காக மாற்றுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். காலங் காலமாக மேல்தட்டு மக்கள் மேல்தட்டு மக்களாகவும், கீழ்த்தட்டு மக்கள் கீழ்த்தட்டு மக்களாகவும் இருக்கவே இந்த ஏற்பாடு – திருத்தம் எல்லாம். சற்று மூளையைக் கசக்கினால் இந்தத் திருத்தத்தின் உண்மைச் சாயம் வெளிப்படும். மூளையுள்ளவர்கள் எண்ணிப் பார்க்க முன் வருவார்களாக! ■

தென்மொழி நன்கொடை வரவுகள்

(28.8.97 முதல் - 30.11.97 முடிய)

1.	கவின் பணிஞன்	புதுக்கோட்டை	7.00
2.	இரா. பதுமநாபன்	மதுரவாயில்	25.00
3.	கவின் பணிஞன்	புதுக்கோட்டை	10.00
4.	அரிமாவளங்கோ	பிரான்சு	5,000.00
5.	சோதிப்பிரகாசம்	இராசத்தான்	36.00
6.	மு.நா.பா. தமிழ்வாணன்	புதுத்தில்லி	9.50
7.	கவின் பணிஞன்	புதுக்கோட்டை	10.00
8.	செந்தாழை அறிறைவன்	தூசான்	3,500.00
9.	இரா. பதுமநாபன்	மதுரவாயல்	25.00
10.	அரிமா வளங்கோ	பிரான்சு	2,500.00
11.	கவின் பணிஞன்	புதுக்கோட்டை	10.00
12.	தென்மொழி கரிகாலன்	திருவள்ளூர்	100.00

அட்டைப்படப் பாடல் தொடர்ச்சி...

வென்றிவிழாக் கோலம்
வெற்றிபெறும் வாய்ப்பிழந்தோர்
நன்றி நவிலும்
பொதுக்கூட்டம் நீளறிக்கை

கள்ளத்தால் வென்றார்கள்
காண்பீர் எனவுரைத்துத்
துள்ளிக் குதிப்பார்கள்
தோல்வியுற்றோர் சிற்சிலபேர்

மன்றம் அமைச்சரவை
மற்றும் எதிர்க்கட்சி
என்றும் பதவிநலம்
நீடிக்கத் திட்டங்கள்!

மொந்தை புதிதெனினும்
உள்ளே நிறைவதெலாம்
முந்தைப் பழங்கள்ளே
அல்லாமல் வேறென்ன?

வலியார்தம் ஆளுமையால்
வாய்மூடி நிற்பவர்கள்
நலிவகன்று நல்லுரிமை
பெற்றுயரும் நாள்வருமோ?

சாலையோ ரத்தில்
சமைத்துண்டு வாழ்பவர்கள்
ஓலைக் குடிசை
உடைமை பெறுவாரோ?

சாதிக் கொழுப்பால்
சழக்கர் மதத் திமிரால்
மோதிக் குலைத்தல்
முடிவு பெறுமோடா?

எல்லாம் பொதுவுடைமை
யாரும் சமமென்னும்
நல்ல பொழுது
நமக்கு விடிந்திடுமோ?

— இறை

தி.பி.2029
(கி.பி.1998)-க்கான

தென்மொழி நாள்காட்டி

பாவலரேறு ஐயா அவர்களின் அழகிய வண்ணப்படத்துடனும் ஐயா அவர்களின் பாடல் வரிகளுடனும், முகாமையான குறிப்புகளுடனும் தமிழ் ஆண்டு நாள்காட்டி வெளிவந்திருக்கிறது.

படிகள் தேவைப்படுவோர் உடனடியாக எழுதவும்.

விலை உரு. 20.00

[படிகள் கூடுதலாகப் பெறுவோருக்கு கழிவுத் தொகை உண்டு]

பதிவு அஞ்சல் செலவு (தனிப்படிக்கு) உரு. 12.00

முகவரி:
'தென்மொழி'
5, அருணாசலத்தெரு,
சென்னை - 5

தமிழில் வழிபாட்டுரிமை:

பாவலரேறு முறையீடும் உச்சமன்றத் தீர்ப்பும்!

– கி. குணத்தொகை

வந்தேறிகள் தம் ஆளுமையைத் தக்கவைத்துக்கொள்ள நம் பண்பாட்டுக் கூறுகள் ஒவ்வொன்றையும் சிதைத்தும் சீரழித்து வருகின்ற நிலைகளில் அவ்விழிநிலைகளிலிருந்து அவற்றை மீட்டெடுக்கும் நம் முயற்சிகள் குறைவாக உள்ளன. அக்குறைவான முயற்சிகளையும் ஆளுமையினர் முறியடிப்பதில் முனைந்து நிற்பது கண்கூடு. கோயிலைக் கைப்பற்றிக்கொண்ட ஆரியப் பார்ப்பனர் தமிழை அங்கிருந்து வெளியேற்றிவிட்டுச் சமற்கிருதத்தில் வழிபாடு நடத்தினர்; நடத்தி வருகின்றனர். இதனைத் தடுத்துத் தமிழ் வழிப்பாட்டுரிமைக்காக அவ்வப்போது பல முயற்சிகள் நடந்து வந்துள்ளது.

தமிழிலும் வழிபாடு செய்யலாம் என்னும் நடைமுறைச் சட்டம் 1961 இல் கொண்டுவரப்பெற்றுள்ளது. பிறகு இந்நிலை நெகிழ்ச்சியுற்றுப் போனது. இதற்கு ஆரியப்பார்ப்பனரைவிட, நம் மக்களின் தன்மானக் குறைவும், ஏமாளித் தன்மையுமே பெருங்கரணியமாகப் பாவலரேறு ஐயா அவர்களால் தென்மொழியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1962-இல் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் தமிழ்வழிபாட்டுரிமைக் கிளர்ச்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1980-இல் திராவிடர் கழகச் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் பாவலரேறு ஐயா அவர்களும், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், கல்வித் தந்தை நெ.து. சுந்தரவடிவேலு, எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணனார் முதலியோரும் பங்கு பெற்றுத் தமிழ்வழிபாட்டுரிமை கோரிக் கிளர்ச்சி தொடங்க வேண்டும் என்று தீர்மானம் இயற்றியுள்ளனர்.

தமிழ்மொழியையும் வழிபாட்டுமொழியாக நடைமுறைப்படுத்தத் தமிழ் நாட்டரசு 5.7.71-இல் கட்டளையிட்டது. இதை எதிர்த்துச் சென்னை உயர்வழக்கு மன்றத்தில் சென்னையைச் சேர்ந்த இருவர் வழக்குப் போட்டனர். இவர்களுக்குச் சார்பாக திருப்பெரும்புதூர் எத்திராசு இராமனுச(சீய)ர் மடத்துத் தலைவரும் காஞ்சிபுரம் ஞானப்பிரகாசர் மடத்தின் தலைவரும் முறையீடு தந்தனர்.

சென்னையைச் சேர்ந்த ஒருவர் அரசு ஏற்பாட்டுக்குச் சார்பாக முறையீடு தந்தார். சமற்கிருத வழிபாட்டுடன், விரும்பிக் கேட்டால் தமிழ் வழிபாடும் செய்யலாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தமிழ்

வழிபாட்டினை எதிர்த்து வி.என். தேவநாதன் என்பாரும், கே. முனிரத்தினம் (நாயுடு) என்பாரும், இதேபோல வழக்கு வழித் தட்சிணாமூர்த்தி (பட்டர்) என்பார் தமிழக அரசையும், மானாமதுரை சோமநாதசாமி கோயில் அறங்காவலர் சிவகங்கை மன்னரையும் எதிர்த்துப் போட்ட வழக்கில் சென்னை உயர்வழக்கு மன்ற நடுவர்கள் ஆயம் (Division Bench) தமிழ்வழிபாட்டுச் சுற்றறிக்கை அரசியல் சட்டத்திற்கோ வேறு எந்த சட்டத்திற்குமோ முரண்பாடானதன்று என்று 10.1.1974-இல் தீர்ப்பளித்துள்ளது.

இருப்பினும் தமிழ்ப்பகைவர்கள் வாளாவிருக்கவில்லை. மறுபடியும் இந்திய அரசியல் சட்டம் 226-இன் கீழ் இதே உயர்வழக்கு மன்றத்தில் வி.எசு. சிறீகுமார், டி. ஆராவமுதன், கே.வி. சொக்கலிங்க(ரெட்டியா)ர் ஆகியோர் இந்து பத்தர்கள் சார்பாகத் தமிழ்வழிபாட்டை எதிர்த்துத் தமிழக அரசின்மேலும், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், வடபழனி ஆண்டவர் கோயில் அறங்காவலர் மீதும் வழக்குத் தொடுத்தனர். திரு. குமரிஅனந்தன், திரு. ஆர். அனந்தபதுமநாபன் திருவண்ணாமலை மடவளாக(ஆதீன) அறங்காவலர் ஆகியோர் இவ்வழக்கில் தமிழ் வழிபாட்டு ஆதரவினர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 10.1.74 தீர்ப்பின் அடிப்படையில் இவ் வழக்குகளைத் தள்ளுபடி செய்வதாக நடுவர் திரு இலட்சுமணன் 17.6.92-இல் இவ்வழக்கில் தீர்ப்பளித்துள்ளார்.

தமிழ்வழிபாட்டை எதிர்த்துத் தமிழ்மொழி சமற்கிருதம் போல் இறைவழிபாட்டுக்குத் தகுதியுடைய மொழி ஆகாது என்றும் ஏற்கனவே தொடங்கியுள்ள தமிழ்வழிபாட்டுக்குத் தடையிட வேண்டும் என்றும் தில்லி உச்சவழக்கு மன்றத்தில் தில்லியைச் சேர்ந்த எம்.எல். சோங்கி என்பாரும் இராமேசுவரம் பஞ்சமுகி அனுமான் கோயில் மகந்து சிறீதுளசி பாபா மடத்தலைவரும் சென்னையைச் சேர்ந்த வி.எசு. சிறீகுமார், மும்பை வசந்து கணேசு பர்ச்சுரோ, ஆக்ராவைச் சேர்ந்த டி.எசு. சச்சேனா, ஆந்திராவைச் சேர்ந்த போண்டி கோவிந்து (செட்டி) ஆகியோரும் இந்திய அரசியல் சட்டப்பிரிவு 32-இன் கீழ் வழக்குகள் தொடுத்தனர்.

இவற்றின் மீது நடுவர்கள் டி.சி. பலேகர், கே.கே. மேத்தியூ, ஒய்.வி. சந்திரசூட், பி.என். பகவதி ஆகியோர் கொண்ட குழு தமிழ்நாட்டரசின் தமிழ்வழிபாட்டுக்கு இடைக்காலத் தடையிட்டு வழக்கில் தீர்ப்பு கூறும்வரை தமிழகக் கோயில்களில் முன்னர்ப் பின்பற்றிவந்த நடைமுறையே தொடரப்பட வேண்டும் என்று 1974–ஆகத்தில் தீர்ப்பளித்தனர்.

இதன்பின்னர் 13 ஆண்டுகள் ஆகியும் வழக்கு திரும்பத் திரும்பத் தள்ளிப் போடப்பெற்று நடைபெறாமல் இருந்ததை எண்ணிப் பாவலரேறு ஐயா அவர்கள் இவ்வழக்கை நடத்தவேண்டும் என்றும் தமிழ்வழிபாட்டுக்கு இட்ட தடையை நீக்க வேண்டும் என்றும்

இவ்வழக்கில் தமிழக அரசுக்குச் சார்பாகத் தம்மையும் எதிர்வழக்காளராக ஏற்றுத் தம் கருத்துகளையும் உச்சவழக்குமன்றம் கேட்டு முடிவு செய்ய வேண்டும் என்றும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில் 1986-இல் தில்லியில் முறையீடு கொடுத்தார்கள். இவ்வகையில் ஐயா அவர்களுக்குத் துணையாகச் செயலாற்றியவர்கள் வழக்கறிஞர்கள் திரு. பி.ஆர்.சி. பொன்னழகன், திரு. நல்லப்பன், திரு. மு. வெங்கடேசப் பெருமாள், திரு.பொ.வே. பத்தவச்சலம் ஆகியோரும் திராவிடச் சமய ஆய்வு நடுவ அமைப்பாளர் பேரா. மு. தெய்வநாயகம், தென்மொழி நா. இளமாறன், திரு மா.பொழிலன் ஆகியோரும் ஆவர்.

பாவலரேறு அவர்கள் உச்சவழக்கு மன்றத்தில் இவ்வழக்குத் தொடர்பாகத் தம் கருத்துகளைத் தமிழில் எடுத்துரைக்கத் தொடங்கினார். (13.8.87) எதிர் வழக்குரைஞர்கள் ஐயா அவர்களை இவ் வழக்கில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று வலுவாக எதிர்த்தனர். ஆனால் நடுவர் திரு. அரங்கநாத மிசரா, ஐயா அவர்களை எதிர் வழக்காளராக ஏற்றுக் கொண்டார்.

அதன்பிறகும் வழக்கு வேகமாக நடைபெறாமலிருந்தது. ஐயா அவர்கள் மொழி, இன, நாட்டுப் பணிகளில் கடுமையாக எழுதியும் பேசியும் இயங்கியும் அலைந்தும் திரிந்தும் அல்லற்பட்டும் பாடாற்றி வந்ததினாலும் அரசின் சிறைப்படுத்தம், வழக்கு போன்ற தொல்லைகளினாலும் மேற்படி வழக்குக்கு நேரம் ஒதுக்க முடியாமலிருந்தது.

இந்நிலையில் 2.4.92 இல் இவ்வழக்குகளில் நடுவர்கள் எசு. மோகன், சி.என். இரே. ஆகியோர் 'ஆகம வடிவ வழிபாடு சமற்கிருதத்தில் உள்ளது. இது வழக்கத்திலிருப்பதாகும் (tradition) அதே சமயத்தில் மதிப்புமிக்க தமிழ்ப் பத்தி இலக்கியங்களாக உள்ள தேவாரமும் திருவாசகமும்கூட வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தமிழ்வழிபாடு இந்த வடிவில் ஊக்குவிக்கப்பட வேண்டி உள்ளது. ஆகம முறைப்படியான வழிபாடு பொதுவில் கடைபிடிக்கப்படும். குருமார்கள் தமிழ் வழிபாட்டில் திறமையுடன் இருக்கின்ற கோயில்களிலும் தமிழ் வழிபாடு கோரப் படுமிடங்களிலும் அத்தகைய வாய்ப்புகளை விரிவுபடுத்தலாம்" என்ற அடிப்படையில் இருபக்க வழக்கறிஞர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள இணக்கத்தினைப் பதிவுசெய்து கொண்டு தமிழ்வழிபாட்டை எதிர்க்கும் முறையீடுகளைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளனர்.

தமிழக அறநிலையத் துறையினர், குறிப்பாக அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் திருக்கோயில்களில் தமிழ்வழிபாட்டுக்கான நூல்களை உருவாக்கச் செய்தும், வழிபாடு செய்விப்போர்க்குப் பயிற்சியளிக்கச் செய்தும் முனைப்புறச் செயல்படுவது பாராட்டத்தக்கது. தமிழ்மக்களில் இறைநம்பிக்கை உடையவர்கள் மட்டுமன்றி, அஃது இல்லாதவர்களுங்கூடத் தமிழ்வழிபாடு வெற்றிபெறவும் வழிவழித் தொடரவும் ஒல்லும் வகையிலெல்லாம் துணைநிற்றல் இன்றியமையாதது. ●

மக்களவை

பேரவைத் தலைவரின் இந்திப் பற்று!

ஐயா,

1969-ஆம் ஆண்டு தில்லியில் மாநிலங்கள் அவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்போது புதுவைப் பகுதி மாநிலங்கள் அவை உறுப்பினர் திரு. புதுவைச் சிவம் அவர்கள் தமிழில் தம் பேச்சைத் தொடங்குகிறார். அப்போது தமிழில் பேசக்கூடாது என்பதற்காக அவையில் ஒரே கூச்சல் – குழப்பம்! அப்போது அவைத்தலைவரைப் பார்த்து "என் தாய்மொழி தமிழ். இந்திய அரசினால் ஏற்பளிப்புப் பெற்ற மொழிகளில் தமிழும் ஒன்று. அவ்வாறிருக்க யான் ஏன் தமிழில் பேசக்கூடாது" என்று கேட்கிறார். உடனே தலைவர், "பேசலாம். உடனே அதை ஆங்கிலம், இந்தியில் மொழி பெயர்த்துச் சொல்ல ஆவன செய்கிறேன்; பேசுங்கள்" என்கிறார். இது 1969-ஆம் ஆண்டைய வரலாறு.

அண்மையில் தமிழ்நாட்டுப் பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு நாளிதழுக்கு அளித்த நேர்காணலில் "நீங்கள் வெளிநாடுகள் சென்றுள்ளீர்கள். அங்கு உங்களுக்கு ஏதாவது சிக்கலான நிலைமைகள் தோன்றியதுண்டா?" என்ற கேள்விக்கு "யான் மரக்கறி உணவையே உண்ணுபவன். வெளிநாடுகளில் மரக்கறி உணவு கிடைப்பது பெரும் சிக்கலாக இருந்தது" என்று கூறிவிட்டு இன்னொன் றையும் கூறியுள்ளார். "மேல்நாடுகளில் மரக்கறி உணவு கிடைக்காத சிக்கலைவிட அண்மையில் பேரவைத் தலைவர்கள் மாநாடு சிமிலாவில் நடைபெற்றது. அங்குச் சென்றபோதுதான் இந்தி தெரியாதது எவ்வளவு பெரிய சிக்கல் என்பதை உணர்ந்தேன்" என்று ஒரு போடு போட்டார். காரணம், அங்கு எல்லாம் இந்தியிலேயே நடந்தனவாம். தமக்கு ஒதுக்கப் பட்ட உதவியாளர்கள், ஓட்டுநர்கள் யாருக்கும் ஒரு சொல் கூட ஆங்கிலம் தெரியவில்லையாம். எல்லாரும் இந்தியில்தான் பேசினார்களாம். தம்மைக் கருத்துக்கூறக் கேட்டபோது, "என்னால் உடனடியாக எதுவும் கூற முடியாது; என்ன பேசினார்கள் என்பதை உணர்ந்து பின்னர்தான் கூறமுடியும்" என்று கூறிவிட்டாராம். இது 1997-ஆம் ஆண்டு வரலாறு.

கிட்டத்தட்ட இந்த முப்பதாண்டுகள் வரலாறு மொழி நிலைமையில் நாம் எவ்வளவு சறுக்கியுள்ளோம் என்பதை உணர்த்துகிறது.

புதுவைச்சிவம் ஓர் இயல்பான மாநிலங்கள் அவை உறுப்பினர். அவர் வடவரின் கூச்சல்களுக்கு அஞ்சவில்லை. ஆனால் பழனிவேல் இராசன் தமிழகப் பேரவைத் தலைவர். சாய்கால் மிக்க குடும்பப் பின்னணி உடையவர். தமிழுணர்வே இல்லாதவர். அவர் தமிழில் பேச வேண்டாம். அவரும் அவரைப் போன்றவர்களும், தாய்மொழியாகவே போற்றுகின்ற – தூக்கிப் பிடிக்கின்ற ஆங்கிலத்தில் பேசுமாறு சொல்லியிருக்கலாம். அல்லது மொழி பெயர்த்தாவது கூறுமாறு சொல்லியிருக்கலாம். இந்தி பேசாத மாநிலங்களைப் பொறுத்தவரை ஆங்கிலமும் ஆட்சி மொழிதானே. இந்திக்காரர்கள் இந்தியில் பேசிக் கொள்ளட்டும். இந்தி பேசாத மாநிலத்தவராகிய தமக்கு அங்கு நடைபெறும் நிகழ்வுகளை அறியும் உரிமையை அளிக்க வேண்டும் என்று கேட்டிருக்க வேண்டுமன்றோ? தாம் ஒரு மாநிலப் பேரவையின் சார்பாளராக வந்துள்ளதை நினைவுபடுத்தியிருக்க வேண்டாமா? இதுபோல் இந்தி வல்லாண்மையை வற்புறுத்துவீர்களானால், நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்படும் என்று எச்சரித்து இருக்க வேண்டாமா? தமிழ் மட்டுமே அறிந்த புதுவைச் சிவத்தினால் தம் உரிமையை உறுதியோடு எடுத்துரைக்க முடிந்தது. ஆனால் ஆங்கிலம் கற்று அதிலேயே துறைபோகிய பழனிவேல் இராசனுக்கு ஏன் அத்தகைய உறுதி வரவில்லை.

அங்கு வந்துள்ளவர்கள் எல்லாரும் ஆங்கிலம் அறியாதவர்களா? அல்லது பேச முடியாதவர்களா? இரண்டொருவர் அப்படியும் இருக்கலாம். பெரும்பாலோர் ஆங்கிலம் கற்றவர்களாகவே இருப்பர். ஆனால் ஆங்கிலப் பேச்சைக் கேட்பது அரிது. அந்த அளவு மொழிப் பற்று உடையவர்களாக விளங்குகின்றனர். அவர்கள் தங்கள் மொழியில் பேசுவதைத்தான் பெருமையாகவும் உரிமையாகவும் எண்ணுகின்றனர். ஆனால் நமது நிலை? ஓர் அரசு முயற்சி செய்தும் இன்னும் பெயர்ப் பலகைகளைத் தமிழாக்க முடியவில்லை. ஆனால் அங்கெல்லாம் பெயர்ப் பலகைகள் இந்தியில்தான் இருக்கவேண்டும் என்று அரசு கட்டளையிட்டதா? ஆனால் இந்தியில்தான் அனைத்துப் பெயர்ப் பலகைகளும் இருக்கின்றன. நடுவணரசு அனைத்து மொழி பேசும் மக்களிடமிருந்து வரிப்பணம் தண்டி, இந்திக்காகக் கோடி கோடியாகச் செலவழிக்கிறது. பழனிவேல்இராசன் போன்றவர்கள் இந்தி தெரியாமல் போனது பெரிய சிக்கல் என்று வருத்தப்படும்போது, அவர் போன்றவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமரும் நிலை இருக்கும்வரை தமிழ் எங்கே வளரும்? தமிழன் என்று இதை உணரப் போகிறான்?

இப் பழனிவேல்இராசனே முன்பொரு தடவை, உயர்கல்வி ஆங்கில வழியில்தான் இருக்கவேண்டும் என்றார். இப்போது இந்தி தெரியவில்லையே என்று கவலைப்படுகிறார். இதன்பொருள் என்ன?

இனி இந்தி படிக்க வேண்டும் என்பதுதானே! இவர் அந்தப் பேரவை மாநாட்டில் தமிழில் பேசியிருக்கவேண்டும். இல்லையானால் இந்தியில் பேசுவதை உடனே தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ மொழி பெயர்க்க ஏற்பாடு செய்யச் செய்திருக்க வேண்டும். இயலவில்லையானால் எதிர்ப்பாவது தெரிவித்திருக்கவேண்டும். செய்யவில்லையே! மாறாக இந்தி தெரியாதது சிக்கலாய்ப் போயிற்று என்று ஏன் அங்கலாய்க்க வேண்டும்? தாம் இரண்டாந்தரக் குடிமகன்தான் என்பதை ஒப்புக்கொள்கிறாரா? அல்லது இந்திக்காரர்களுக்கு நல்ல பிள்ளையாய் நடந்து கொள்ள வேண்டுமே என்று அஞ்சுகிறாரா? தாம் இந்தியை எதிர்க்கும் தமிழ்நாட்டுக்காரரல்லர் என்பதைக் காட்ட முயல்கிறாரா? அல்லது தமது மேட்டுக் குடித்தனத்தை நிலைநாட்ட முயல்கிறாரா?

இந்த அரசியல்காரர்களால் நம் மொழிக்கோ, இனத்திற்கோ, நாட்டு முன்னேற்றத்திற்கோ எவ்வகைப் பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே, மாற்று வழிகளைச் சிந்தித்தாக வேண்டிய நிலையில் உள்ளோம். ஒரு சிலராவது முற்றாக இல்லாவிட்டாலும், ஓரளவிற்கேனும் தன்னலத்தை ஈகம் செய்து பொது நோக்குடன் உழைக்க முன்வர வேண்டும்.

மொழியை மதியாதவர்கள் பொதுவாழ்வில், அரசியலில் தலையெடுக்கவே முடியாத நிலையை உருவாக்க வேண்டும்.

– **சோ. க. அறிவுடைநம்பி,** சோமன்கோட்டை.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்
கனிச்சாறு

தென்மொழி அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

ooo

நம் ஐயா அவர்களின் தனிப்பாடல்கள் முழுமையும் திரட்டி வெளியிடுகிற முயற்சியாய்க் 'கனிச்சாறு' - தொகுப்புப் பணி நடந்து கொண்டிருக்கிறது.

அத் தொகுப்பில் - இணைப்பதற்கான வகையில் ஐயா அவர்கள் அன்பர்கள் நூல்களுக்கு அணிந்துரையாகவும், திருமண வாழ்த்துரையாகவும் பிறவகையிலும் பாடல்கள் எழுதியனுப்பி இருப்பின் - அதன் படப்படி ஒன்றை உடனடியாக அன்பர்கள் 'தென்மொழி' - முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகிறார்கள்.

ஆசிரியர், 'தென்மொழி'

அமெரிக்கக் கொடுவினைப் பட்டியலும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்!

அமெரிக்க அரசாட்சி அமைச்சு, முப்பது கருவிப் போராட்ட அமைப்புகளை வெளிநாட்டு கொடுவினை அமைப்புகள் [Foreign Terrorist organizations) என இம்மாதம் (அத்தோபர்) 8ஆம் பக்கல் அறிவித்துள்ளது. அயர்லாந்து தேசியப் படை (IRA) மற்றும் இந்தியக் காசுமீரத்தின்கண் கருவிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சில அமைப்புகள் தவிர்ந்த - பெரும்பாலும் கருவிப் போராட்ட அமைப்புகள் அனைத்தும் அமெரிக்கக் 'கொடுவினை'ப் பட்டியலில் உள்ளடக்கப் பட்டுள்ளன. தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1996-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட 'கொடுவினை எதிர்ப்புக் கொலைத் தண்டனை நடைமுறைச் சட்டத்தின் படியே அமெரிக்க அரசாட்சி அமைச்சு இத்தகையதோர் அறிவிப்பைச் செய்துள்ளது.

இச் சட்டத்தின்படி ஓர் அமைப்பை வெளிநாட்டுக் கொடுவினை அமைப்பு என அறிவிப்பதற்கு மூன்று கரணியங்கள் தேவை.

1. அறிவிக்கப்படும் அமைப்பு ஒரு வெளிநாட்டு அமைப்பாக இருத்தல் வேண்டும்.
2. குறிப்பிட்ட அமைப்பு கொடுவினை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
3. அக் குறிப்பிட்ட அமைப்பின் செயற்பாடுகள் அமெரிக்க நலன்களுக்கு முரணாக அமைதல் வேண்டும்.

இம் மூன்று கரணியங்களும் பொருந்திவரின் மட்டுமே ஒரு வெளிநாட்டு அமைப்பைக் 'கொடுவினை அமைப்பு' என்று அறிவிக்கச் சட்டம் இடமளிக்கின்றது. ஆனால் இம் மூன்று கரணியங்களில் இங்கு முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட - அதாவது 'குறிப்பிட்ட அமைப்பு வெளிநாட்டு அமைப்பாக இருத்தல் வேண்டும்' என்பதனைத் தவிர மற்ற இரண்டு வரையறைகளும் 'அமெரிக்க நலன்' என்ற கண்ணாடி யூடாகப் பார்வையிடப்பட்டே தீர்மானிக்கப்படுகின்றன.

உலகில் கருவிப் போராட்டத்தில் ஈடுபடும் அமைப்புகள் தமது இலக்கினை அடைந்து கொள்வதற்காகப் பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளைச் செய்வது தேவையானது. படை, பொருளியல்

இலக்குகள் ஒரு போரின்போது தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய இலக்குகளாகப் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஆனால் அமெரிக்க அரசாட்சி அமைச்சினைப் பொறுத்தவரை தாக்கப்படும் இலக்குகள், தாக்கப்படும் முறை என்பன தனது நலனுக்குக் குந்தகமாக இருக்கும் போது அவற்றைக் 'கொடுவினை நடவடிக்கைகள்' என வரையறை செய்துவிடுகின்றது. இப்போதைய உலக ஒழுங்கில் சமனிலைக் கட்டமைப்புக்கு எதிராக அழிவுவேலைகள் செய்ய வேண்டிய தேவை அதிகமில்லாத கரணியத்தினால், அமெரிக்க அரசு கடந்த காலத்தை யெல்லாம் எளிதில் மறந்து, கருவிப் போராட்டத்தில் ஈடுபடும் அமைப்புகளைக் 'கொடுவினை அமைப்புகள்' என எளிதில் முத்திரை குத்திவிட முடிகிறது.

அமெரிக்க அரசாட்சி அமைச்சினால், கொடுவினைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட அமைப்புகளுக்கு அமெரிக்க மண்ணில் தலையாய இரு கட்டுப்பாடுகள் வகுக்கப்படுகின்றன.

1. இவ் அமைப்புகள் தங்கள் அமைப்புகளின் பெயரில் நேரடியாகப் பொருள் திரட்ட முடியாது. இருப்பினும் மருத்துவம், சமய ஆவணங்கள் போன்றவற்றுக்காகப் பொருள் திரட்ட முடியும் என அமெரிக்க அரசாட்சி அமைச்சின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.
2. இவ் அமைப்புகளின் உறுப்பினர்களோ அல்லது அதிகார முறைப்படியான படிநிகராளியரோ(பிரதிநிதிகளோ) அமெரிக்கக் குடியுரிமை அற்றவர்களாக இருப்பின் அமெரிக்க மண்ணிலிருந்து வெளியேற்றப்படலாம். அதேவேளை பட்டியலில் உள்ளடக்கியுள்ள அமைப்புகளின் உறுப்பினர்களுக்கும், அதிகார முறைப்படியான படிநிகராளியர்க்கும் அமெரிக்காவுக்குச் செல்வதற்கான 'இசைவு' மறுக்கப்படலாம்.

இப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட அமைப்புகள் தம் கருத்துகளை அமெரிக்க மண்ணில் வெளிப்படுத்துவதற்கான உரிமை இச் சட்டத்தின் மூலம் பறிக்கப்படவில்லை.

பொதுவாக இப்பட்டியல் இரண்டு ஆண்டுகளுக்கே செல்லுபடியாகும். குறிப்பிடப்பட்ட அமைப்புகளைத் தொடர்ந்தும் கொடுவினைப் பட்டியலில் சேர்த்து வைத்திருக்க வேண்டும் என அமெரிக்க அரசாட்சி அமைச்சுக் கருதுமாயின் ஒவ்வோர் ஈராண்டு களுக்கும் பட்டியலைப் புதுப்பிக்க வேண்டும். அதேவேளை எந்த ஓர் அமைப்பையும் எந்த நேரத்திலும் பட்டியலில் சேர்ப்பதற்கோ அல்லது

விலக்குவதற்கோ அரசாட்சி அமைச்சருக்கு அதிகாரம் உண்டு.

இப் பட்டியல் தொடர்பான அறிவிப்பு இம் மாதம் (அத்தோபர்) எட்டாம் பக்கல் வெளிவந்தவுடன், அமெரிக்க அரசாட்சி அமைச்சில் செய்தியாளர் மாநாடு ஒன்று இடம்பெற்றுள்ளது. இச் செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட வினாக்களில் மூன்று தலையாய புலனங்கள் இடம்பெற்றன.

1. அயர்லாந்து விடுதலைப் படை (IRA) பட்டியலில் உள்ளடக்கப் படாததன் கரணியம் என்ன?
2. காசுமீரக் கருவிப் போராட்ட அமைப்புகளில் பாகுபாடு காட்டப்பட்டது ஏன்?
3. 'மொசாட்டு' (இசுரேலிய உளவு அமைப்பு) இப் பட்டியலில் உள்ளடக்கப்படாதது ஏன்?

அயர்லாந்து விடுதலைப் படையைப் பொறுத்தவரை பேச்சுரை நடைபெறும் சூழல் கரணியமாகப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை எனவும், அதன் நடவடிக்கைகளை அமெரிக்க அரசு தொடர்ந்து கவனித்து முடிவினை எடுக்கும் எனவும் பேச்சாளரால் மறுமொழி யளிக்கப்பட்டிருந்தது.

பாகித்தானில் இருந்து இயங்கும் காசுமீரக் கருவிப்போராட்ட அமைப்பினைப் பட்டியலில் சேர்த்து, இந்தியாவில் இருந்து இயங்கும் அமைப்பினைப் பட்டியலில் சேர்க்காதது குறித்தே இப் பாகுபாடு தொடர்பான வினா காசுமீரத்தைப் பொறுத்து எழுப்பப்பட்டது. இதற்குப் பேச்சாளர் விரிவான, தெளிவான மறுமொழி அளிக்கவில்லை. 'மொசாட்டு'த் தொடர்பாக, அது வெளிநாட்டுக் கொடுவினை அமைப்பு அன்று என மறுமொழி அளிக்கப்பட்டது. மேலும் 'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்' பட்டியலில் உள்ளடக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டி, இது குறித்து ஏதாவது வெளிநாட்டு அரசுகளின் ஏடல் (ஆலோசனை) பெறப்பட்டதோ எனச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய வினாவுக்கும் பேச்சாளர் நேரடியாக மறுமொழி கூறவில்லை. இச் செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட வினாக்கள், 'அமெரிக்க நலன்' என்ற அளவுகோலினை வைத்தே 'கொடுவினை' வரையறை செய்யப்படும் போக்கினை வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்தவையாகவே தெரிந்தன.

பட்டியலில் உள்ளடக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் அமெரிக்கக் குடிமக்கள் மாந்தவுரிமை அமைப்புகள் அமெரிக்க அரசாட்சி அமைச்சின் இம்முடிவை எதிர்க்க முடியுமா?

சட்டமூலமாக இருவகையில் எதிர்ப்பினை வெளிப்படுத்த முடியும்.

1. பட்டியலில் குறிப்பிட்ட அமைப்புகள் அமெரிக்க அரசாட்சி அமைச்சின் முடிவை எதிர்த்து வழக்கு மன்றத்தில் ஞாயங் கோர முடியும். இத்தகையதொரு ஞாயக் கோரிக்கை, பட்டியல் கொடுவினை இயக்கமாக அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

பொதுவாக இப் புலனத்தில் அமெரிக்க அரசாட்சி அமைச்சின் முடிவை வழக்குமன்றம் மாற்றி அமைப்பதற்கு வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். இருப்பினும் கொள்கை முறைப்படி அமெரிக்க அரசாட்சி அமைச்சின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பும் அமைப்புகள், இவ்வழியினைக் கருத்து வெளிப்பாட்டுக்கான ஒரு தளமாகப் பயன்படுத்த முடியும்.

2. அமெரிக்காவின் குடிமக்கள் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தினால் தமக்குத் தரப்பட்ட உரிமைகள், புதிய சட்டத்தினால் பறிக்கப்படுகின்றன என்று அரசியலமைப்புச் சட்ட அடிப்படையிலான எதிர்வழக்கினை நடத்தலாம்.

1996 ஆம் ஆண்டு 'கொடுவினை எதிர்ப்புக் கொலைத் தண்டனை நடைமுறை'ச் சட்டத்தின் அடிப்படையிலான இக் கொடுவினைப் பட்டியலை எதிர்த்து நடக்கக் கூடிய இத்தகைய வழக்குகள் 'அரசாட்சி அமைச்சு'க்குப் பெருந்தலைவலியாக அமையலாம் என நோக்காளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இத்தகைய பின்னணிகளுடன் அமைந்த அமெரிக்க கொடுவினைப் பட்டியலில் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பு உள்ளடக்கப்பட்டிருப்பதனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எத்தகைய தாக்கங்கள் ஏற்படக்கூடும்?

உண்மையில் இப்போது அமெரிக்காவில் நடைபெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்ட ஆதரவுச் செயற்பாடுகளுக்கு இப் புதிய பட்டியலால் குந்தகம் எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இப் பட்டியல் நடைமுறைக்கு வரினும் குந்தகம் எதுவும் ஏற்படாத வகையிலேயே அமெரிக்காவில் போராட்ட ஆதரவுச் செயற்பாடு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை எமது போராட்டத்தின் நயன்மையினை மழுங்கடிப்பதற்கு இவ் வறிவிப்பினைச் சிறீலங்கா அரசு கருவியாகப் பயன்படுத்தும். சிறீலங்கா அரசின் உலகந் தழுவிய கருத்துப் பரப்புதல் முயற்சிகளுக்கு அமெரிக்க அரசாட்சி அமைச்சின் இப்பட்டியல் துணைநிற்கக்கூடும்.

இப்பட்டியலில் 'விடுதலைப் புலிகள்' அமைப்பின் பெயர் உள்ளடக்கப் பட்டமை தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் தனது பொந்திகையின்மை(அதிருப்தி)யைத் தெரிவித்திருக்கிறது. இப்பட்டியல் உலகத் தமிழ்மக்களுக்கிடையே இயக்கத்துக்கும் போராட்டத்துக்கும் இருக்கும் ஆதரவில் தாக்கத்தினை ஏற்படுத்தாது எனவும் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தனது நலனின் அடிப்படையில் இம்முடிவுகளை எடுத்திருப்பினும் சிறீலங்கா இனவெறி அரசுகளின் கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளாகி அதனை எதிர்த்துப் போராடிவரும் தமிழீழ மக்களைப் பொறுத்த வரை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரினைக் கொடுவினைப் பட்டியலில் உள்ளடக்கிய அமெரிக்க அரசின் முடிவு தவறானதுதான்.

குற்றவாளி தமக்குத் தேவையானவர் என்பதற்காகக் குற்றவாளியின் பக்கத்தில் நின்று தாக்குமுற்றவருக்கு எதிராக நடுவர் ஒருவர் தீர்ப்பளிப்பின் அது எவ்வாறு முறைகேடானதாக அமையுமோ அதேபோல் ஒடுக்குமுறைச் சிறீலங்கா அரசுக்குச் சார்பாக அமெரிக்க அரசு செயற் பட்டிருக்கும் வகையும் முறைகேடானதே.

இம்முடிவின் மூலம் தமிழீழ மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் முறைகேட்டைக் களைந்து ஞாயத்தின்படி நின்று செயற்படுமாறு அமெரிக்க அரசினைத் தூண்டுவது - அமெரிக்க அரசாட்சி அமைச்சுக்கு வேண்டுகோள் விடுப்பது உலகத் தமிழ்மக்களது கடமையாகும்.

இன்றைய சூழலில் பின்வரும் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அமெரிக்க அரசாட்சி அமைச்சிடம் வேண்டுகோள்களை விடுப்பதில் உலகத் தமிழ்மக்கள் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பினைக் கொடுவினை அமைப்புகளின் பட்டியலில் இருந்து அரசாட்சி அமைச்சு அகற்ற வேண்டும்.
2. தமிழ்மக்களுக்கு எதிரான இனப்படுகொலையினைப் புரியும் சிறீலங்கா அரசுக்கு வழங்கும் படை பொருளியல் உதவிகளை நிறுத்த வேண்டும்.
3. இலங்கையின் தேசிய இனச்சிக்கலில் அமெரிக்க அரசு நடுவுநிலையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நன்றி: 'உலகத் தமிழர்'
(1997 அக். 24 - நவ. 6)

செய்திகள்

மதியழகன் - சுடர்விழி திருமணம்

திருவள்ளூர் மாவட்டம் செகநாதபுரம் திரு. சாம்பசிவம் - அலர்மேல் இணையரின் மகன் செல்வன் சீனிவாசன் என்ற மதியழகனுக்கும், காரணைத் திரு. சீனிவாசன் - இந்திராணி இணையரின் மகள் செல்வி சோதி என்ற சுடர்விழிக்கும் தி.பி. 2028 துலை 23 ஞாயிறு *(9.11.'97)* அன்று பஞ்சட்டியில் திருமணம் நடைபெற்றது. திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் தலைமை தாங்கித் திருமணத்தை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார். சொல்லாய்வு அறிஞர் அருளியார், திருவாளர்கள் தமிழரசன், தமிழ்ப்பாண்டியன், திருவாட்டி இறைபொற்கொடி, திருவாளர்கள் இராமதாசு, தமிழ்ச்செல்வன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். திரு. வேலு நன்றி நவின்றார்.

திருமணம்: அரங்க. சண்முகம் - த. பதுமாவதி
அரங்க. செந்தில்குமரன் - மு. சுபாசுவள்ளி

விழுப்புரம் மாவட்டம் பாக்கம்புதூர் திரு. அரங்கசாமி - அலர்மேலு அம்மாள் இணையரின் முதல்மகன் செல்வன் சண்முகம், தானம் (நினைவில் வாழும்) திரு. வை. தங்கவேல் அவர்களின் மகள் செல்வி பதுமாவதி ஆகியோர்க்கும் மற்றும் அரங்கசாமி - அலர்மேலு இணையரின் இளைய மகன் செல்வன் செந்தில்குமரன், செங்காணாங் கொல்லை, திரு. முத்துக்குமரன் பழனியம்மாள் இணையரின் மகள் செல்வி சுபாசுவள்ளி ஆகியோர்க்கும் தி.பி. 2028 நளி 4 அறிவன் *(19.11.'97)* அன்று திருக்கோயிலூரில், சாத்தனூர்ப் புலவர் மு. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் திருமணவிழா நடைபெற்றது. திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் அவர்கள் திருமணங்களை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார். மணமக்களை வாழ்த்தி திரு. நடனம், திரு. இரா. மோகனசுந்தரம் ஆகியோர் உரையாற்றினார்.

நளி 3 செவ்வாய் *(18.11.'97)* இரவு குடும்ப வளர்ச்சியில் பெரும்பங்கு கொள்பவர் குடும்பத்தலைவனா தலைவியா என்னும் பொருள்குறித்த பட்டிமன்றம் புலவர். மு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தலைவியே என்று திருவாளர்கள் இரா. மோகனசுந்தரம், இல. குணசேகரன், திருவாட்டி. இராதிகா வித்தியாசாகர் ஆகியோரும்,

தலைவனே என்று திருவாளர்கள் கி. சிவகுமார், பு. குகன், ப. முருகன் ஆகியோரும் வழக்காடினர்.

தொல்காப்பியன் - கலைவாணி திருமணம்:

செஞ்சி வட்டம் பாலப்பாடிப் புலவர் மா. முத்துச்சாமி - பேபி அம்மையார் இணையரின் மகன் செல்வன் தொல்காப்பியனுக்கும், போளூர் திரு. பி. உமாபதி - சரோசா இணையரின் மகள் செல்வி கலைவாணிக்கும் தி.பி. 2028 நளி 5 வியாழன் (20.11.97) அன்று, திருவண்ணாமலையில் திருக்குறள்மணி புலவர். இறைக்குருவனார் அவர்கள் தலைமையிலும் , கீழக்கொடுங்காலூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுக் கழகத் தலைவர் திரு. ச. சி. பெருமாள் அவர்கள் முன்னிலையிலும் திருமணவிழா நடைபெற்றது. புலவர் மா. முத்துசாமி வரவேற்புரையாற்றினார். புலவர் இறைக்குருவனார் அவர்கள் திருமணத்தை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார். திருவாளர்கள் ச.சி. பெருமாள், அ.பு. அறவாழி, கே.எசு. உலகையன், புலவர் மு. விவேகானந்தன், புலவர் மு. சுந்தரேசன், திரு. ஏ. செல்வன், புலவர் மு. பரசுராமன், தளபதி த. சாமிநாதன், புலவர் ஆ. செனார்த்தனம், திரு. என். கண்ணன், புலவர் மு. ஆறுமுகம், பாக்குயில் பெ. வரதராசன், புலவர் ந. நடராசன், புலவர் மு. சுப்பிரமணியன், திரு. இரா. பச்சையப்பன், திருவாட்டி சாந்தி, திருவாட்டி கண்ணம்மாள் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர்.

பாவலரேறு தமிழ்க்களம்:
தென்மொழி அன்பர்கள் கலந்துரையாடல் - கல்பாக்கம்

பாவலரேறு தமிழ்க்கள அமைப்புக்கு நன்கொடை திரட்டுதல் தொடர்பாகக் காஞ்சி மாவட்டம் கல்பாக்கம் தென்மொழி அன்பர்களின் கலந்துரையாடல் கூட்டம், தி.பி. 2028 நளி 12 வியாழன் (27.11.97) அன்று நடைபெற்றது. திரு. கலைமன்னன் வரவேற்றுப் பேசினார். முனைவர் அரணமுறுவல் அறிமுகவுரையாற்றினார். திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் நிகழ்ச்சியிற் கலந்துகொண்டு பாவலரேறு ஐயா அவர்களைப் பற்றியும் தமிழ்க்கள அமைப்புக் குறித்தும் உரையாற்றிய தோடு, அன்பர்கள் எழுப்பிய வினாக்களுக்கும் ஐயங்களுக்கும் விளக்கமளித்தார்.

கூட்டத்தில் இருபத்தைவர் அளவில் அன்பர்கள் வருகை தந்திருந்தனர். தமிழ்க்கள அமைப்புக்கு நன்கொடை தண்டும் முயற்சியை முனைந்து மேற்கொள்வதாகக் கூறினர். முனைவர் அரணமுறுவல், திரு. கலைமன்னன் ஆகியோர் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

O

நூல் அறிமுகம்

தமிழ்த் தேசியம் - பேருரைகள்

தொகுப்பு: 'தமிழியம்' சார்பில் '**நிகழ்**', 123, காளீசுவரர் நகர், கோயம்புத்தூர் - 641 009. விலை: உரு. 40.00.

தமிழ்த்தேசியம் - தொடர்பான பல்வேறு தலைப்புகளில் திருவாளர்கள், பூ. அர. குப்புசாமி, கு.ச. ஆனந்தன், தியாகு, வே. ஆனைமுத்து, பெ. மணியரசன், கி.வே. தமிழ்நாடன், எசு.என். நாகராசன் - ஆகியோரின் பேச்சுத் தொகுப்பும், அவர்களின் கருத்தைக் குறுக்கிட்டு எழுப்பிய கேள்விக்கான விடைகளின் பதிவும்.

உலகம் பரவிய தமிழின் வேர்

ஆசிரியர்: முனைவர். **கு. அரசேந்திரன்**, தமிழ்த்துறை, சென்னைக் கிருத்துவக் கல்லூரி, தாம்பரம், சென்னை - 59., உரு. 100/-

'கல்' - என்னும் மூலச் சொல் குறித்தான - ஆய்வுநூல்.

பாவலரேறு பன்மணிமாலை

ஆசிரியர்: புலவர் **பொதிகைச் செல்வன்**, கொங்கு நட்புறவுப் பதிப்பகம், 70, ஈ.கி. குமரன் தெரு, ஈரோடு - 638 004, விலை: உரு. 10.00.

பாவலரேறு ஐயா அவர்களின் மறைவுத் தாக்கத்தால் சிந்திய கண்ணீரில் மலர்ந்த பூக்களே இச் சிறுநூல்.

அன்றும் இன்றும் - சில ஆய்வுகள்.

ஆசிரியர்: முனைவர் **கடவூர் ப. மணிமாறன்**, விடியல் வெளியீட்டகம், 109, மேலைத் தெரு, கிருட்டிணராயபுரம் - 639 102, கரூர் மாவட்டம். விலை: 20.00.

பல்வேறு காலச் சூழல்களில் கருவாகி உருவாகிக் கனிந்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே 'அன்றும் இன்றும் - சில ஆய்வுகள்' நூல்.

திராவிட இயக்கத்தின் முதல் நிறுவனர் திருவள்ளுவரே !

ஆசிரியர்: **தேவ. சீனி. சுந்தரம்**, 4.அ/10 - தந்தை பெரியார் சிதம்பரநாதபுரம் 2ஆம் தெரு, தேவக்கோட்டை - 623 302. விலை: 5.00.

திருக்குறளில் முதல் நான்கு அதிகாரங்களின் குறள்களைப் பகுப்பாய்வு செய்த வெளியீடு.

நன்செய்

ஆசிரியர் **மாரி. அறவாழி**, அறவாழி பதிப்பகம், எண்:1, மூன்றாவது தெரு, இலக்குமிபுரம் விரிவு. 2, தாம்பரம், சென்னை - 600 045. விலை: உரு. 50.00.

"நல்ல தமிழில் கருத்தாழம் நிறைந்த புதின இலக்கியங்களை வரவேற்கும் இலக்கியத் தும்பிகளுக்கு 'நன்செய்' ஒரு நல்ல விருந்து"

"பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பைந்தமிழ்த் தொண்டு!"

கல்லூரி மாணவர்கட்கான கட்டுரைப் போட்டி!

தனித்தமிழ் இலக்கியக் கழகம் அறிவிப்பு!

கடந்த முப்பத்தோராண்டுகளாக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகள் நடத்திப் பரிசு வழங்கி மாணவர் திறனை வளர்த்துத் தமிழ்ப் பணியாற்றி வரும் நெல்லை - பாளையங்கோட்டைத் தனித்தமிழ் இலக்கிய கழகம், இவ்வாண்டுப் போட்டிக்கான கட்டுரையின் ஆய்வுப் பொருளாகப் 'பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பைந்தொண்டு' என்னுந் தலைப்பை அறிவித்துள்ளது. முதற்பரிசு உரு. 4000 மதிப்புள்ள தங்கப் பதக்கமும், பரிசுபெறும் மாணவரின் கல்லூரிக்கு வெள்ளி உருள்கலனுமாகும். இரண்டாவது மூன்றாவது பரிசுகளும் உண்டு.

போட்டி பற்றிய பிற விளக்கங்கள் வருமாறு:

இவ்வாண்டுக்குரிய ஆய்வுப்பொருள்:

"பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பைந்தமிழ்த் தொண்டு"

1. தமிழகத்தின் பதினான்கு பல்கலைக் கழகங்களைச் சார்ந்த கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆண், பெண் ஆகிய இருபாலரும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. எழுத்தோவியம் முழு வெள்ளைத்தாளில் ஐம்பது பக்கங்களுக்குக் குறையாமலும் அறுபது பக்கங்களுக்கு மிகாமலும் அமைய வேண்டும். மேற்கோள் நூற்பட்டியல் இறுதியில் இடம்பெற வேண்டும்.
3. இருபதாம் நூற்றாண்டின் இலக்கியத் துறையில் சாய்கால் மிக்கதாக மிளிரும் மரபு வழிப்ப பா நடை இலக்கியம் பற்றிய ஆய்வு வேண்டற்பாலது. பல்வேறு துறைகளில் பைந்தமிழுக்குத் தொண்டாற்றிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைக் குறித்து விரிவாக ஆராய்வது விரும்பத்தக்கது.
4. ஆய்வுக் கட்டுரையினை மாணவர் எழுதியதற்கான உறுதிமொழியினை, அவர் பயிலும் கல்லூரி முதல்வர் அல்லது தமிழ்ப் பேராசிரியர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டும்.
5. தனித்தாளில் மாணவர் பெயர், பயிலும் வகுப்பு, கல்லூரிப் பெயர், இல்ல முகவரி ஆகியவற்றைக் குறித்து அறிவித்திட வேண்டும்.

ஆராய்ச்சிக் கட்டுரை வந்து சேருவதற்குரிய இறுதிநாள்: 20.1.97

கருத்தோவியங்களை அனுப்பவும் போட்டி பற்றிய விளக்கங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

முனைவர் பா. வளன்அரசு, தலைவர்: தனித்தமிழ் இலக்கியக் கழகம், 1 - அ, நெல்லை நாயனார் தெரு, பாளையங்கோட்டை, - **627 002.**

நமக்கு வந்த மடல்கள்.

0:1638 பேரன்புடையீர் வணக்கம்.

இன்று வந்த 'தென்மொழி' இதழின் முகப்புப் பாடலைப் படித்தேன். எளியேனின் நெஞ்சம், நலிந்த உடல் நிலையிலும் கொதித்தது. தாங்கள் எழுதியதுதான் உண்மை; இவ் வுண்மையை நாற்பத்தைந்தாண்டுகளாக இவன் நன்கறிவான்; ஆனால் எவர் இக் கடையனின் உள்ளத்தை உணர்ந்து ஏற்பர்? ஆயினும், காலம் உண்மையைப் புலப்படுத்தும் என்பது இவனின் நம்பிக்கை. அது, இன்று யான் படித்த தங்கள் பாடல் வழி வெடித்தது கண்டேன்; அதுபோதும். 'சூழ்நிலைமை எந்நொடியும் மாறும்' என்பதை அறியார் அல்லர், 'அரசியல் பிழைத்தோர்'; அவர்கட்கு 'அறம் கூற்றாகும் நாள்' வந்தே தீரும்!

இதற்கிடையே என் மன வருத்தத்தை வெளிப்படுத்தவே இம் மடலை வரைகின்றேன். நம்மவர்களும் ஆடுகள்போல் இறைச்சிக் கடைக்காரனை'யே நம்பி நிற்கின்றனரே! இந் நிலைமை மாறாத வரையில், இறைச்சிக் கடைக்காரன் தொழில் நடந்துகொண்டுதான் இருக்கும். எனினும், தங்கள் பாடலைப் படித்த பின்னரேனும், நம்மவர்கள் உண்மையினைத் தெளிந்து, கழுவாய் தேடுதலொன்றே, செய்யத்தக்கது.

ஆசிரியவுரையின் தலைப்பைப் படித்ததுமே, அடியேன் ஏறத்தாழ முப்பது ஆண்டுகட்கு முன், 'கவிதை'யில் எழுதிய முகப்புப் பாடல் நினைவிற்கு வந்தது. பழஞ் சுவடியை எடுத்து, அப் பாடலைப் படியெடுத்து இத்துடன் இணைத்துள்ளேன் தங்கள் பார்வைக்காக! இதையே வேறு இனத்தவன் பாடியிருப்பின், 'ஆகா, என்னே தொலைநோக்கு!' எனப் பதாகை உயர்த்திப் புகழ்ந்தேத்துவர். தெசிணியின் அரத்தத் துடிப்பை, அவன் தோன்றிய இனத்தோனே, அரை நூற்றாண்டுத் தொண்டுக்குப் பின்னரும் புரிந்து கொள்ளவில்லையே!

–**பாவலர் தெசிணி,** சென்னை - 4.

0:1639 அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

தென்மொழி சுவடி:29, ஓலை:11 கிடைத்தது நன்றி.

நெல்சன் மண்டேலா, யாசர் அராபத்து ஆகியோருடன் பிரபாகரனும் பட்டியலிடப்பட்டுள்ளது ("அமெரிக்காவே! தமிழீழம் உன் கொல்லைப் புறமன்று!") பிரபாகரனுக்குப் பெருமை சேர்க்காது. ஏனென்றால் அமெரிக்காவின் நலனுக்கு எதிரான கருவி தாங்கிய குழுக்களின்